# ஆழ்வார்களுகந்த ராமன்

## பெரியாழ்வார்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாந வைரக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3 வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம்॥

கூரத்தாழ்வான் அருளிச் செய்த, குருபரம்பரை தனியன்

லக்ஷ்மீநாத2 ஸமாரம்பா4ம் நாத2 யாமுந மத்4யமாம் ।
அஸ்மதா3சார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம் ॥

எம்பெருமானார் (ஊடையவர்) தனியன்

யோ நித்யமச்யுத பதா3ம் பு3ஜ யுக்3ம ருக்ம
வ்யாமோஹதஸ் ததி3தராணி த்ருணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர் ப4க3வதோஸ்ய தயைக ஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥

நம்மாழ்வார் தனியன்
(ஆளவந்தார் அருளிச் செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயாவிபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர் வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரி யுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥

ஆழ்வார்வர்கள், உடையவர் தனியன்
(ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்தது)

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீ ப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரி ரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்॥

# பெரியாழ்வார் திருமொழி

**தனியன்**

*(நாதமுனிகள் அருளிச்செய்தது)*

**கு3ருமுக3 மநதீ4த்ய ப்ராஹ வேதா4ந ஶேஷாந்**
**நரபதி பரிக்லுப்தம் ஶுல்க மாதா3து காம:**
**ஶ்வஶுர மமர வந்த்3யம் ரங்க3நாத2ஸ்ய ஸாக்ஷாத்**
**தி3விஜகுல திலகம் தம் விஷ்ணு சித்தம் நமாமி ॥**

*(பாண்டியபட்டர் அருளிச்செய்தது)*
*இருகற்பநேரிசை வெண்பா*

**மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று ஒருகால்**
**சொன்னார் கழற்கமலம் சூடினோம் * முன்னாள்**
**கிழியறுத்தான் என்றுரைத்தோம் * கீழ்மையினிற்சேரும்**
**வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.**

**பாண்டியன்கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று ***
**ஈண்டிய சங்கமெடுத்தூத * வேண்டிய**
**வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் ***
**பாதங்கள் யாமுடைய பற்று.**

# *முதல் பத்து* *பெரியாழ்வார் திருமொழி*

## திருப்பல்லாண்டு ( 1 - 1)

**§ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ***
**பலகோடி நூறாயிறம்,**
**மல்லாண்ட திண்தோள்மணிவண்ணா ***
**உன்சேவடி செவ்வி திருக்காப்பு.** 1

**அடியோமோடும் நின்னோடும் ***
**பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ***
**வடிவாய் நின்வலமார்பினில் ***
**வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ****
**வடிவார் சோதி வலத்துறையும் ***
**சுடராழியும் பல்லாண்டு ***
**படைபோர்புக்கு முழங்கும் ***
**அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டே.** 2

**வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் ***
**வந்து மண்ணும்மணமும் கொண்மின் ***

கூழாட்பட்டு நின்றீர்களை *
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் **
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் *
இராக்கதர்வாழ் *
இலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப் *
பல்லாண்டு கூறுதுமே 3

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம்வந்து *
எங்கள் குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள் *
வரம்பொழி வந்துஒல்லைக்கூடுமினோ **
நாடும் நகரமும் நன்கறிய *
நமோ நாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் ! *
வந்து பல்லாண்டு கூறுமினே 4

அண்டக்குலத்துக்கதிபதியாகி *
அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தை எடுத்துக்களைந்த *
இருடீகேசன்தனக்கு**
தொண்டைக்குலத்திலுள்ளீர் ! வந்தடிதொழுது *
ஆயிரம்நாமம் சொல்லி *
பண்டைக்குலத்தைத் தவிர்ந்து *
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே 5

எந்தை தந்தை தந்தை தந்தை தம்மூத்தப்பன் *
ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழி ஆட்செய்கின்றோம் **
திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி *
அரியையழித்தவனை *
பந்தனைதீரப் பல்லாண்டு *
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே. 6

தீயிற்பொலிகின்ற செஞ்சுடராழி *
திகழ் திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலே ஒற்றுண்டுநின்று *

குடிகுடி ஆட்செய்கின்றோம் **
மாயப்பொருபடை வாணனை *
ஆயிரந்தோளும் பொழிகுருதிபாய *
சுழற்றிய ஆழிவல்லானுக்குப் *
பல்லாண்டு கூறுதுமே 7

நெய்யிடை நல்லதோர் சோறும் *
நியதமும்அத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு *
காதுக்குக்குண்டலமும் **
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து *
என்னை வெள்ளுயிராக்க வல்ல *
பையுடைநாகப் பகைக்கொடியானுக்குப் *
பல்லாண்டு கூறுவனே. 8

உடுத்துக்களைந்த நின்பீதகவாடையுடுத்துக் *
கலத்ததுண்டு *
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன *
சூடும் இத்தொண்டர்களோம் **
விடுத்த திசைக்கருமம் திருத்தி *
திருவோணத்திருவிழவில் *
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் *
பல்லாண்டு கூறுதுமே. 9

எந்நாள் எம்பெருமான் *
உன்தனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்களடிக்குடில் *
வீடுபெற்று உய்ந்தது காண் **
செந்நாள் தோற்றித் *
திருமதுரையுள் சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே ! *
உன்னைப்பல்லாண்டு கூறுதுமே. 10

§ அல்வழக்கொன்றுமில்லா *
அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் *
திருமாலே! நானும் உனக்குப்பழவடியேன் **

நல்வகையால் நமோ நாராயணாவென்று *
நாமம் பலபரவி *
பல்வகையாலும் பவித்திரனே! *
உன்னைப் பல்லாண்டு கூறுவனே. 11

§ பல்லாண்டென்று பவித்திரனைப் *
பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான் தன்னை *
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பியசொல் **
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் *
நமோ நாராயணாயவென்று *
பல்லாண்டும் பரமாத்மனைச் *
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே. ॥ 12

துப்புடை ஆயர்கள் தம்சொல்வழுவாது ஒருகால்,
தூயகருங்குழல் நல்தோகைமயிலனைய *
நப்பினை தன்திறமா நல்விடையேழவிய,
நல்லதிறலுடைய நாதனும் ஆனவனே **
தப்பினபிள்ளைகளைத் தனமிகுசோதிபுகத்,
தனியொரு தேர்கடவித்தாயொடு கூட்டிய * என்
அப்ப! எனக்கு ஒருகால் ஆடுகசெங்கீரை,
ஆயர்கள் போரேறே! ஆடுகஆடுகவே• 1-6-7

§ உன்னையும் ஒக்கலையில் கொண்டு தமில்மருவி,
உன்னொடு தங்கள் கருத்தாயின செய்துவரும் *
கன்னியரும்மகிழக் கண்டவர் கண்குளிரக்,
கற்றவர்தெற்றிவரப்பெற்ற எனக்கு அருளி **
மன்னுகுறுங்குடியாய்! வெள்ளறையாய்! , மதிள்சூழ்
சோலைமலைக்கரசே! கண்ணபுரத்தமுதே! *
என் அவலம்களைவாய்! ஆடுகசெங்கீரை,
ஏழுலகுமுடையாய்! ஆடுகஆடுகவே• 1-6-8

கொங்கைவன், கூனிசொற்கொண்டு * குவலயத்
துங்கக்கரியும், பரியும் இராச்சியமும் **
எங்கும்பரதற்கருளி, வன்கானடை *

அங்கண்ணன் அப்பூச்சி காட்டுகின்றான்,
அம்மனே!அப்பூச்சிகாட்டுகின்றான்• 2-1-8

§ வல்லாளிலங்கை மலங்கச், சரந்துரந்த *
வில்லாளனை, விட்டுசித்தன் விரித்த **
சொல்லார்ந்த அப்பூச்சிப்பாடல், இவைபத்தும்
வல்லார்போய், வைகுந்தம் மன்னியிருப்பரே• 2-1-10

முலையேதும் வேண்டேன் என்றோடி,
நின்காதில்கடிப்பைப் பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்து மகிழ்ந்து கல்மாரிகாத்துப்,
பசுநிரை மேய்த்தாய்! **
சிலையொன்று இறுத்தாய்! திரிவிக்கிரமா!,
திருவாயர்பாடிப்பிரானே! *
தலைநிலாப்போதே உன்காதைப்பெருக்காதே,
விட்டிட்டேன் குற்றமேயன்றே. 2-3-7

கன்றுகளோடச்செவியில், கட்டெறும்பு பிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில், வெண்ணெய் திரட்டிவிழுங்குமாகாண்பன் **
நின்ற மராமரம் சாய்த்தாய்! , நீ பிறந்த திருவோணம் *
இன்று நீ நீராடவேண்டும், எம்பிரான் ஓடாதே வாராய் 2-4-2

பொன்திகழ், சித்திரகூடப்பொருப்பினில் *
உற்றவடிவில், ஒரு கண்ணும்கொண்ட ** அக்
கற்றைக்குழலன், கடியன் விரைந்து உன்னை *
மற்றைக்கண் கொள்ளாமே கோல்கொண்டுவா
மணிவண்ணநம்பிக்கு ஓர் கோல்கொண்டு வா 2-6-7

மின்னிடைச்சீதை பொருட்டா, இலங்கையர் *
மன்னன் மணிமுடி, பத்தும் உடன்வீழ **
தன்னிகரொன்றில்லாச், சிலைகால் வளைத்திட்ட *
மின்னு முடியற்கு ஓர் கோல்கொண்டு வா *
வேலையடைத்தாற்கு ஓர் கோல்கொண்டு வா. 2-6-8

தென்னிலங்கை மன்னன், சிரம் தோள்துணி செய்து *
மின்னிலங்கு பூண், விபீடண நம்பிக்கு **
என்னிலங்கு நாமத்தளவும், அரசென்ற *

மின்னலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா,
வேங்கடவாணர்க்கு ஓர் கோல்கொண்டு வா. 2-6-9

புள்ளினைவாய்பிளந்திட்டாய்!, பொருகரியின் கொம்பொசித்தாய் ! *
கள்ளவரக்கியை மூக்கொடு, காவலனைத்தலைகொண்டாய் ! **
அள்ளி நீ வெண்ணெய்விழுங்க, அஞ்சாதுஅடியேன்அடித்தேன் *
தெள்ளிய நீரிலெழுந்த, செங்கழுநீர் சூட்டவாராய். 2-7-5

என் வில்வலிகண்டு போவென்று, எதிர்வந்தான் *
தன் வில்லினோடும், தவத்தை எதிர்வாங்கி *
முன் வில்வலித்து, முதுபெண்ணுயிருண்டான் *
தன் வில்லின் வன்மையைப் பாடிப்பற,
தாசரதி தன்மையப் படிப்பற. 3-9-2

மாற்றுத் தாய் சென்று, வனம்போகே என்றிட *
ஈற்றுத்தாய் பின்தொடர்ந்து, எம்பிரான்! என்றுஅழ **
கூற்றுத்தாய் சொல்லக், கொடியவனம் போன *
சீற்றமிலாதானைப் பாடிப்பற,
சீதைமணாளனைப் பாடிப்பற. 3-9-4

முடியொன்றி, மூவுலகங்களுமாண்டு * உன்
அடியேற்கருளென்று, அவன்பின் தொடர்ந்த **
படியில்குணத்துப், பரதநம்பிக்கு * அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப்பற,
அயோத்தியர் கோமானைப் பாடிப்பற. 3-9-6.

தார்க்கு இளந்தம்பிக்கு , அரசீந்து * தண்டகம்
நூற்றவள், சொல்கொண்டு போகி** நுடங்கிடைச்
சூர்ப்பணகாவைச், செவியொடு மூக்கு * அவள்
ஆர்க்க அரிந்தானைப்பாடிப்பற,
அயோத்திக்கரசனைப் பாடிப்பற. 3-9-8

காரார் கடலையடைத்திட்டு, இலங்கைபுக்கு *
ஓராதான் பொன்முடி, ஒன்பதோடொன்றையும் **
நேரா அவன் தம்பிக்கே, நீளரசீந்த *

ஆராவமுதனைப் பாடிப்பற,
அயோத்தியர் வேந்தனைப் பாடிப்பற. 3-9-10

§ நெறிந்த கருங்குழல் மடவாய்!, நின்னடியேன் விண்ணப்பம் *
செறிந்த மணிமுடிச்சனகன், சிலையிறுத்து நினைக்கொணர்ந்தது
அறிந்து * அரசுகளைகட்ட, அருந்தவத்தோன் இடைவிலங்க*
செறிந்தசிலை கொடுதவத்தைச், சிதைத்ததும் ஓரடையாளம் 3-10-1

அல்லியம் பூமலர்க் கோதாய்!, அடிபணிந்தேன் விண்ணப்பம் *
சொல்லுகேன் கேட்டருளாய், துணைமலர்க்கண் மடமானே! **
எல்லியம்போது இனிதிருத்தல், இருந்ததோர் இடவகையில் *
மல்லிகை மாமாலை கொண்டு, அங்கு ஆர்த்ததும் ஓரடையாளம் 2

கலக்கிய மாமனத்தனளாய்க், கைகேசி வரம்வேண்ட *
மலக்கிய மாமனத்தனனாய், மன்னவனும் மறாதொழிய **
குலக்குமரா! காடுறையப், போ என்று விடை கொடுப்ப *
இலக்குமணன் தன்னொடும் , அங்கு ஏகியது ஓரடையாளம் 3

வாரணிந்த முலைமடவாய்!, வைதேவீ! விண்ணப்பம் *
தேரணிந்த அயோத்தியர்கோன், பெருந்தேவீ! கேட்டருளாய் **
கூரணிந்த வேல்வலவன், குகனோடும் கங்கைதன்னில்*
சீரணிந்த தோழமை, கொண்டதும் ஓரடையாளம் 4

மானமருமென்னோக்கி!, வைதேவீ! விண்ணப்பம்
கானமரும் கல்லதர்போய்க், காடுறைந்தகாலத்து**
தேனமரும் பொழிற்சாரல், சித்திரகூடத்து இருப்ப *
பால்மொழியாய்!, பரதநம்பி பணிந்ததும் ஓரடையாளம். 5

சித்திரகூடத்து இருப்பச், சிறுகாக்கை முலைதீண்ட *
அத்திரமே கொண்டெறிய, அனைத்துலகும் திரிந்தோடி **
வித்தகனே! இராமாவோ!, நின்னபயம் என்று அழைப்ப *
அத்திரமே அதன் கண்ணை, அறுத்ததும் ஓரடையாளம் 6

மின்னொத்த நுண்ணிடையாய்!, மெய்யடியேன் விண்ணப்பம் *
பொன்னொத்தமானொன்று , புகுந்து இனிது விளையாட **
நின் அன்பின்வழிநின்று , சிலைபிடித்து எம்பிரான்ஏக *
பின்னே அங்கு இலக்குமணன், பிரிந்ததும் ஓரடையாளம் 7

மைத்தகு மாமலர்க்குழலாய்!, வைதேவீ! விண்ணப்பம் *
ஒத்தபுகழ் வானரக்கோன் , உடனிருந்து நினைத்தேட **
அத்தகுசீர் அயோத்தியர்கோன் , அடையாளமிவை மொழிந்தான் *
இத்தகையால் அடையாளம் , ஈது அவன் கை மோதிரமே 8

§ திக்குநிறைபுகழாளன், தீவேள்விச்சென்ற நாள் *
மிக்க பெருஞ்சபை நடுவே, வில்லிறுத்தான் மோதிரம்கண்டு **
ஒக்குமால் அடையாளம், அனுமான்! என்று * உச்சிமேல்
வைத்துக்கொண்டு உகந்தனளால், மலர்க்குழலாள் சீதையுமே3-10.9.

கதிராயிரம் இரவி, கலந்தெரித்தால் ஒத்த நீள்முடியன் *
எதிரில் பெருமை இராமனை, இருக்குமிடம் நாடுதிரேல் **
அதிரும் கழற்பொருதோள், இரணியனாகம் பிளந்து அரியாய்*
உதிரமளைந்த கையோடிருந்தானை, உள்ளவா கண்டாருளர். 4-1-1

நாந்தகம் சங்கு தண்டு, நாணொலிச் சார்ங்கம் திருச்சக்கரம் *
ஏந்து பெருமை இராமனை, இருக்குமிடம் நாடுதிரேல் **
காந்தள் முகிழ்விரல் சீதைக்காகிக், கடுஞ்சிலை சென்றிறுக்க *
வேந்தர்தலைவன் சனகராசன் தன், வேள்வியில் கண்டாருளர் 4-1-2

கொலை யானைக் கொம்பு பறித்துக் , கூடலர் சேனைபொருதழிய *
சிலையால் மராமரமெய்த தேவனைச், சிக்கென நாடுதிரேல் **
தலையால் குரக்கினம் தாங்கிச்சென்று , தடவரை கொண்டடைப்ப *
அலையார் கடற்கரை வீற்றிருந்தானை, அங்குத்தைக் கண்டாருளர்4.1.3

அலம்பா வெருட்டாக், கொன்று திரியும் அரக்கரை *
குலம் பாழ்படுத்துக், குலவிளக்காய் நின்றகோன்மலை **
சிலம்பார்க்கவந்து, தெய்வமகளிர்களாடும் சீர் *
சிலம்பாறுபாயும், தென் திருமாலிருஞ்சோலையே 4-2-1

வல்லாளன் தோளும், வாளரக்கன் முடியும் * தங்கை
பொல்லாத மூக்கும்,போக்குவித்தான் பொருந்தும் மலை**
எல்லாவிடத்திலும் எங்கும் பரந்து, பல்லாண்டொலி *
செல்லா நிற்கும் சீர்த், தென் திருமாலிருஞ்சோலையே. 4-2-2

கனங்குழையாள் பொருட்டாக், கணைபாரித்து * அரக்கர்தங்கள்
இனம் கழுவேற்றுவித்த, எழில்தோள் எம்மிராமன் மலை **
கனம்கொழி தெள்ளருவி, வந்துசூழ்ந்துஅகல் ஞாலமெல்லாம் *
இனம் குழுவாடும் மலை, எழில் மாலிருஞ்சோலையதே 4-3-7

எரி சிதறும் சரத்தால், இலங்கையினை * தன்னுடைய
வரிசிலை வாயில் பெய்து, வாய்க்கோட்டம் தவிர்த்துகந்த **
அரையனமரும் மலை, அமரரொடு கோனும்சென்று *
திரிசுடர் சூழும்மலை, திருமாலிருஞ்சோலையதே 4-3-8

தங்கையை மூக்கும் தமையனைத்தலையும்
தடிந்த, எம் தாசரதிபோய்
எங்கும் தன் புகழாவிருந்து அரசாண்ட,
எம் புருடோத்தமனிருக்கை *
கங்கை கங்கையென்ற வாசகத்தாலே,
கடுவினை களைந்திடுகிற்கும் * கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற,
கண்டமென்னும்கடிநகரே 4-7-1

கூன்தொழுத்தை சிதகுரைப்பக்,கொடியவள் வாய்க்கடிய சொல்கேட்டு *
ஈன்றெடுத்த தாயரையும், இராச்சியமும் ஆங்கொழிய **
கான் தொடுத்த நெறிபோகிக் , கண்டகரைக் களைந்தானூர் *
தேன்தொடுத்த மலர்ச்சோலைத் , திருவரங்கமென்பதுவே 4-8-4

பெருவரங்களவைபற்றிப் , பிழக்குடைய இராவணனை *
உருவரங்கப் பொருதழித்து , இவ்வுலகினைக் கண்பெறுத்தானூர் **
குரவரும்பக் கோங்கலரக் , குயில்கூவும் குளிர் பொழில் சூழ் *
திருவரங்கமென்பதுவே , என் திருமால் சேர்விடமே. 4-8-5

கீழுலகில் அசுரர்களைக், கிழங்கிருந்து கிளராமே *
ஆழிவிடுத்து அவருடைய, கருவழித்த வழிப்பனூர் **
தாழை மடலூடுரிஞ்சித், தவள வண்ணப்பொடியணிந்து *
யாழினிசை வண்டினங்கள், ஆளம் வைக்கும் அரங்கமே. 4-8-6

கொழுப்புடைய செழுங்குருதி , கொழித்திழிந்து குமிழ்த்தெறிய *
பிழக்குடைய அசுரர்களைப் , பிணம் படுத்த பெருமானூர் **
தழுப்பரிய சந்தனங்கள் , தடவரைவாய் ஈர்த்துக்கொண்டு *
தெழிப்புடைய காவிரி வந்து , அடிதொழும் சீரரங்கமே. 4-8-7

பருவரங்களவைபற்றிப் , படையாலித்தெழுந்தானை *
செருவரங்கப்பொருதழித்த , திருவாளன் திருப்பதிமேல் **
திருவரங்கத் தமிழ்மாலை , விட்டுசித்தன் விரித்தனகொண்டு *
இருவரங்கமெரித்தானை , ஏத்தவல்லாரடியோமே 4-8-10

மரவடியைத்தம்பிக்கு , வான்பணையம்
வைத்துப்போய் வானோர்வாழ *
செருவுடைய திசைக்கருமம் திருத்தி வந்து
உலகாண்ட திருமால்கோயில் **
திருவடிதன் திருவுருவும்,
திருமங்கைமலர் கண்ணும் காட்டி நின்று *
உருவுடைய மலர்நீலம்
காற்றாட்ட , ஓசலிக்கும் ஒளியரங்கமே. 4-9-1

§ தன்னடியார் திறத்தகத்துத் ,
தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் *
என்னடியார் அதுசெய்யார்,
செய்தாரேல் நன்று செய்தாரென்பர் போலும் **
மன்னுடைய விபீடணற்கா,
மதிளிலங்கைத் திசைநோக்கிமலர்க்கண் வைத்த *
என்னுடைய திருவரங்கற்கன்றியும்,
மற்றொருவர்க்கு ஆளாவரே 4-9-2

*ஆண்டாள் அருளிச்செய்த* ***திருப்பாவை***

**நீளாதுங்க$_3$ ஸ்தநகி$_3$ரி தடீ ஸூப்த முத்$_3$போ$_3$த்$_4$ய க்ருஷ்ணம்**
**பாரார்த்$_2$யம் ஸ்வம் ஶ்ருதி ஶதஶிரஸ் ஸித்$_3$த$_4$ மத்$_4$யாபயந்தீ ।**
**ஸ்வோச்சி$_2$ஷ்டயாம் ஸ்ரஜி நிக$_3$ளிதம் யா ப$_3$லாத்க்ருத்ய பு$_4$ங்க்தே**
**கோ$_3$தா$_3$ தஸ்யை நம இத$_3$மித$_3$ம் பூ$_4$ய ஏவாऽஸ்து பூ$_4$ய : ॥**

அன்னவயல்புதுவை ஆண்டாள்அரங்கற்குப் *
பன்னுதிருப்பாவைப் பல்பதியம் * இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை * பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை *
பாடியருளவல்ல பல்வளையாய் ! * நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதியென்ற இம்மாற்றம் *
நாம்கடவா வண்ணமே நல்கு.

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி *
நினைத்து முலைவழியே நின்றுபால்சோர *
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் *
பனித்தலைவீழ நின்வாசற் கடைபற்றிச் **
சினத்தினால் தென்இலங்கைக் கோமானைச்செற்ற *
மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய் *
இனித்தான் எழுந்திராய் ஈதென்னபேருறக்கம் *
அனைத்தில்லத்தாரும் அறிந்தேலோரெம்பாவாய் 12

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாஅரக்கனைக் *
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்ப் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம்புக்கார் *
வெள்ளியெழுந்து வியாழம் உறங்கிற்று **
புள்ளும்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய் *
குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே *
பள்ளிக்கிடத்தியோ பாவாய்! நீ நன்னாளால் *
கள்ளம்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய் 13

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி *
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி *
பொன்றச்சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி *
கன்றுகுணிலா எறிந்தாய்! கழல்போற்றி **
குன்றுகுடையாய் எடுத்தாய் ! குணம்போற்றி *
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி*
என்றென்று உன்சேவகமே ஏத்திப்பறைகொள்வான் *
இன்றுயாம்வந்தோம் இரங்கேலோரெம்பாவாய் 24

## *நாச்சியார் திருமொழி*

அல்லிநாள்தாமரைமேல்ஆரணங்கினின்துணைவி *
மல்லிநாடாண்ட மடமயில் மெல்லியலாள் *
ஆயர்குலவேந்தனாகத்தாள் * தென்புதுவை வேயர்பயந்தவிளக்கு.

முற்றிலாத பிள்ளைகளோம் , முலைபோந்திலாதோமை * நாள்தொறும்
சிற்றில்மேலிட்டுக்கொண்டு,நீசிறிதுண்டு திண்ணெனநாம் அது கற்றிலோம்*
கடலையடைத்து அரக்கர்குலங்களை , முற்றவும்செற்று *
இலங்கையைப் பூசலாக்கிய சேவகா! , எம்மைவாதியேல். 2-6

பேத நன்கறிவார்களோடு , இவைபேசினால் பெரிதுஇன்சுவை *
யாதுமொன்றறியாத பிள்ளைகளோமை , நீநலிந்து என்பயன் **
ஓதமாகடல்வண்ணா! , உன் மணவாட்டிமாரொடு சூழறும் *
சேதுபந்தம் திருத்தினாய்! , எங்கள்சிற்றில்வந்து சிதையேலே.2-7

சீதைவாயமுதமுண்டாய்! , எங்கள் சிற்றில்நீ சிதையேலென்று *
வீதிவாய் விளையாடும் , ஆயர்சிறுமியர் மழலைச்சொல்லை **
வேதவாய்த் தொழிலார்கள் வாழ், வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன்தன் *
கோதைவாய்த் தமிழ்வல்லவர் , குறைவின்றி வைகுந்தம் சேருவரே 2.10

எல்லே! ஈதென்ன இளமை? , எம்மனைமார் காணிலொட்டார் *
பொல்லாங்கு ஈதென்று கருதாய் , பூங்குருந்தேறியிருத்தி **
வில்லால் இலங்கையழித்தாய்! , நீ வேண்டியதெல்லாம் தருவோம் *
பல்லாரும் காணாமே போவோம் , பட்டைப் பணித்தருளாயே. 3-3

பரக்கவிழித்துஎங்கும்நோக்கிப் , பலர்குடைந்தாடும் சுனையில் *
அரக்கநில்லா கண்ணநீர்கள் , அலமருகின்றவா பாராய் **
இரக்கமேலொன்றுமிலாதாய் !, இலங்கையழித்த பிரானே ! *
குரக்கரசு ஆவது அறிந்தோம் , குருந்திடைக்கூறைபணியாய். 3-4

மாமிமார் மக்களேயல்லோம் , மற்றும்இங்கு எல்லாரும்போந்தார் *
தூமலர்க்கண்கள்வளரத் , தொலையிராத்துயில்வானே **சேமமேலன்றிது
சாலச் , சிக்கெனநாம்இதுசொன்னோம் *
கோமளஆயர்கொழுந்தே ! , குருந்திடைக்கூறைபணியாய் ! 3-8

முல்லைப்பிராட்டி!, நீஉன்முறுவல்கள்கொண்டு * எம்மை
அல்லல்விளைவியேல், ஆழிநங்காய்! உன்னடைக்கலம் **
கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட, குமரனார்
சொல்லும் பொய்யானால், நானும் பிறந்தமை பொய்யன்றே 10-4.

## *பெருமாள் திருமொழி*

இன்னமுதமூட்டுகேன் இங்கேவாபைங்கிளியே *
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள் * பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் * எங்கள்
குலசேகரனென்றே கூறு.

*(மணக்கால்நம்பி அருளிச்செய்தது)*

ஆரம்கெடப்பரனன்பர்கொள்ளாரென்று * அவர்களுக்கே
வாரம்கொடுகுடப்பாம்பிற் கையிட்டவன் * மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோல் கொல்லிகாவலன் வில்லவர்கோன் *
சேரன்குலசேகரன் முடிவேந்தர்சிகாமணியே.

மன்னுபுகழ்க்கௌசலைதன் , மணிவயிறுவாய்த்தவனே !*
தென்னிலங்கைக்கோன்முடிகள் , சிந்துவித்தாய்! செம்பொன்சேர் **
கன்னிநன்மாமதிள்புடைசூழ் , கணபுரத்துஎன்கருமணியே !*
என்னுடைய இன்னமுதே! , இராகவனே! தாலேலோ 8-1

புண்டரிகமலரதன்மேல் , புவனியெல்லாம்படைத்தவனே ! *
திண்திறலாள் தாடகைதன் , உரமுருவச்சிலைவளைத்தாய் !**
கண்டவர்தம்மனம்வழங்கும் , கணபுரத்துஎன்கருமணியே *
எண்திசையும்ஆளுடையாய் ! , இராகவனே! தாலேலோ 8-2

கொங்குமலி கருங்குழலாள் , கௌசலைதன்குலமதலாய் ! *
தங்குபெரும்புகழ்ச்சனகன் , திருமருகா தாசரதீ ! **
கங்கையிலும் தீர்த்தமலி , கணபுரத்துஎன்கருமணியே ! *
எங்கள்குலத்துஇன்னமுதே! , இராகவனே! தாலேலோ 8-3

தாமரைமேல்அயனவனைப் , படைத்தவனே! * தயரதன் தன்
மாமதலாய் ! , மைதிலிதன்மணவாளா ! ** வண்டினங்கள்
காமரங்கள் இசைபாடும் , கணபுரத்துஎன்கருமணியே! *
ஏமருவும்சிலைவலவா! , இராகவனே! தாலேலோ 8-4

பாராளும் படர்செல்வம் , பரத நம்பிக்கேயருளி *
ஆராவன்பிளையவனோடு , அருங்கானம்அடைந்தவனே ! **
சீராளும்வரைமார்பா , திருக்கண்ணபுரத்தரசே *
தாராளும்நீண்முடி , என்தாசரதீ! தாலேலோ 8-5

சுற்றமெல்லாம் பின்தொடரத் , தொல்கானம்அடைந்தவனே ! *
அற்றவர்கட்கு அருமருந்தே! , அயோத்திநகர்க்குஅதிபதியே ! **
கற்றவர்கள்தாம்வாழும் , கணபுரத்துஎன்கருமணியே! *
சிற்றவைதன் சொற்கொண்ட , சீராமா! தாலேலோ 8-6

ஆலினிலைப்பாலகனாய் , அன்று உலகமுண்டவனே ! *
வாலியைக்கொன்றுஅரசு,இளையவானரத்துக்குஅளித்தவனே !
காலின்மணிகரையலைக்கும் , கணபுரத்துஎன்கருமணியே ! *
ஆலிநகர்க்குஅதிபதியே ! , அயோத்திமனே ! தாலேலோ 8- 7

§ மலையதனால்அணைகட்டி , மதிள்இலங்கைஅழித்தவனே ! *
அலைகடலைக்கடைந்து , அமரர்க்குஅமுதருளிச்செய்தவனே !*
கலைவலவர் தாம்வாழும் , கணபுரத்துஎன்கருமணியே !*
சிலைவலவா! சேவகனே! , சீராமா! தாலேலோ 8-8

தளையவிழும்நறுங்குஞ்சித் , தயரதன்தன்குலமதலாய் !*
வளையஒருசிலையதனால் , மதிள்இலங்கைஅழித்தவனே! **
களைகழுநீர் மருங்கலரும் , கணபுரத்துஎன்கருமணியே !*
இளையவர்கட்கு அருளுடையாய் ! , இராகவனே! தாலேலோ 8-9

§ தேவரையும்அசுரரையும் , திசைகளையும்படைத்தவனே! *
யாவரும்வந்துஅடிவணங்க , அரங்கநகர்த்துயின்றவனே! *
காவிரிநல்நதிபாயும் , கணபுரத்துஎன்கருமணியே! *
ஏவரிவெஞ்சிலைவலவா! , இராகவனே! தாலேலோ 8-10

வன்தாளினிணைவணங்கி
வளநகரம்தொழுதேத்த , மன்னனாவான்
நின்றாயை * அரியணைமேல்இருந்தாயை ,
நெடுங்கானம் படரப்போகு
வென்றாள் ** எம் இராமாவோ! ,
உனைப்பயந்த கைகேசிதன் சொற்கேட்டு *
நன்றாக நானிலத்தை யாள்வித்தேன் ,
நன்மகனே! உன்னைநானே 9-1

வெவ்வாயேன்வெவ்வுரைகேட்டு ,
இருநிலத்தைவேண்டாதேவிரைந்து * வென்றி
மைவாய களிறொழிந்து தேரொழிந்து
மாவொழிந்து , வனமே மேவி **
நெய்வாய வேல்நெடுங்கண் ,
நேரிழையும் இளங்கோவும் பின்புபோக *
எவ்வாறுநடந்தனை? எம்இராமாவோ ! ,
எம்பெருமான்! என்செய்கேனே ! 9-2

**கொல்லணைவேல் வரிநெடுங்கண் ,**
**கௌசலைதன்குலமதலாய்! குனிவில்லேந்தும் ***
**மல்லணைந்த வரைத்தோளா ! ,**
**வல்வினையேன் மனம்உருக்கும் வகையேகற்றாய் ****
**மெல்லணைமேல்முன்துயின்றாய் ,**
**இன்றுஇனிப்போய் வியன்கான மரத்தின்நீழல்***
**கல்லணைமேல்கண்துயிலக்கற்றனையோ ? ,**
**காகுத்தா! கரியகோவே** 9-3

**வாபோகுவா இன்னம்வந்து ,**
**ஒருகால்கண்டுபோ மலராள்கூந்தல் ***
**வேய்போலும் எழில்தோளி தன்பொருட்டா ,**
**விடையோன்தன் வில்லைச்செற்றாய்****
**மாபோகுநெடுங்கானம் ,**
**வல்வினையேன் மனம்உருக்கும்மகனே ! ***
**இன்று நீபோகஎன்நெஞ்சம் ,**
**இருபிளவாய்ப் போகாதே நிற்குமாறே !** 9-4

**பொருந்தார் கைவேல் நுதிபோல் பரல்பாய ,**
**மெல்லடிக்கள் குருதிசோர ***
**விரும்பாத கான்விரும்பி வெயிலுறைப்ப ,**
**வெம்பசி நோய்கூர ** இன்று**
**பெரும்பாவியேன் மகனே!போகின்றாய் ,**
**கேகயர்கோன் மகளாய்ப்பெற்ற ***
**அரும்பாவி சொற்கேட்ட அருவினையேன் ,**
**என்செய்கேன்? அந்தோ!யானே** 9-5

**அம்மாவென்று உகந்துஅழைக்கும் ,**
**ஆர்வச்சொல்கேளாதே அணிசேர்மார்வம்***
**என்மார்வத்திடையழுந்தத் தழுவாதே ,**
**முழுசாதே மோவாதுச்சி **கைம்மாவின் நடையன்ன மென்னடையும் ,**
**கமலம்போல்முகமும்காணாது ***
**எம்மானை என்மகனை இழந்திட்ட ,**
**இழிதகையேன் இருக்கின்றேனே** 9-6

பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப்புனைந்து ,
பூந்துகில்சேர்அல்குல் *
காமரெழில் விழலுடுத்துக் கலனணியாது ,
அங்கங்கள் அழகுமாறி **
ஏமருதோள் என்புதல்வன் ,
யான்இன்று செலத்தக்க வனம்தான்சேர்தல் *
தூமறையீர்! இதுதகவோ? ,
சுமந்திரனே! வசிட்டனே! சொல்லீர் நீரே 9-7

பொன்பெற்றாரெழில்வேதப்புதல்வனையும் ,*
தம்பியையும்பூவைபோலும் *
மின்பற்றா நுண்மருங்குல் ,
மெல்லியலென் மருகியையும் வனத்திற்போக்கி **
நின்பற்றா நின்மகன்மேல் பழிவிளைத்திட்டு ,
என்னையும் நீள்வானில்போக்க *
என்பெற்றாய்? கைகேசீ! ,
இருநிலத்தில் இனிதாக இருக்கின்றாயே 9-8

முன்னொருநாள் மழுவாளி சிலைவாங்கி ,
அவன்தவத்தை முற்றும்செற்றாய் *
உன்னையும்உன்அருமையையும்உன்மோயின்
வருத்தமும், ஒன்றாகக்கொள்ளாது **
என்னையும்என்மெய்யுரையும் மெய்யாகக்
கொண்டு ,வனம்புக்கவெந்தாய் ! *
நின்னையேமகனாகப் பெறப்பெறுவேன் ,
ஏழ்பிறப்பும் நெடுந்தோள்வேந்தே ! 9-9

தேனகுமாமலர்க்கூந்தல் கௌசலையும் ,
சுமித்திரையும் சிந்தைநோவ *
கூனுருவின் கொடுந்தொழுத்தைசொற்கேட்ட,
கொடியவள்தன்சொற்கொண்டு **இன்று கானகமே மிகவிரும்பி
நீதுறந்த, வளநகரைத்துறந்து * நானும் வானகமே
மிகவிரும்பிப்போகின்றேன் , மனுகுலத்தார் தங்கள்கோவே! 9-10

§ ஏரார்ந்த கருநெடுமால் இராமனாய் ,
வனம்புக்க அதனுக்கு ஆற்றா *

தாரார்ந்த தடவரைத்தோள் தயரதன்தான்
புலம்பிய ,அப்புலம்பல்தன்னை **
கூரார்ந்த வேல்வலவன் கோழியர்கோன் ,
குடைக்குலசேகரன் சொற்செய்த *
சீரார்ந்த தமிழ்மாலை இவைவல்லார் ,
தீநெறிக்கண் செல்லார்தாமே 9-11

அங்கணெடு மதிள்புடைசூழ் அயோத்தியென்னும் ,
அணிநகரத்து உலகனைத்தும் விளக்கும்சோதி *
வெங்கதிரோன்குலத்துக்கு ஓர்விளக்காய்த்தோன்றி ,
விண்முழுதும் உயக்கொண்ட வீரன்தன்னை **
செங்கணெடுங்கருமுகிலை இராமன்தன்னைத் ,
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் *
எங்கள்தனிமுதல்வனை எம்பெருமான்தன்னை ,
என்றுகொலோ! கண்குளிரக் காணும்நாளே 10-1

வந்தெதிர்ந்த தாடகைதன் உரத்தைக்கீறி ,
வருகுருதி பொழிதர வன்கணையொன்றேவி *
மந்திரம்கொள் மறைமுனிவன் வேள்விகாத்து ,
வல்லரக்கர் உயிருண்ட மைந்தன்காண்மின் **
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண்சோலைத் ,*
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
அந்தணர்கள்ஒருமூவாயிரவர்ஏத்த ,
அணிமணியாசனத்திருந்த அம்மான்தானே 10-2

செவ்வரி நற்கருநெடுங்கண் சீதைக்காகிச் ,
சினவிடையோன் சிலையிறுத்து மழுவாளேந்தி *
வெவ்வரி நற்சிலைவாங்கி வென்றிகொண்டு ,
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன்தன்னை **
தெவ்வரஞ்சு நெடும்புரிசை உயர்ந்தபாங்கர்த் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எவ்வரிவெஞ்சிலைதடக்கை இராமன்தன்னை ,
இறைஞ்சுவார் இணையடியே இறைஞ்சினேனே 10-3

தொத்தலர் பூஞ்சுரிகுழல் கைகேசிசொல்லால் ,
தொன்னகரம்துறந்து துறைக்கங்கைதன்னை *

பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப்புக்குப் ,
பரதனுக்குப் பாதுகமும் அரசுமீந்து **
சித்திரகூடத்து இருந்தான் தன்னை , இன்று
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எத்தனையும் கண்குளிரக் காணப்பெற்ற ,
இருநிலத்தார்க்கு இமையவர் நேரொவ்வார்தாமே. 10-4

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக்கொன்று ,
வண்தமிழ் மாமுனிகொடுத்த வரிவில்வாங்கி *
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கைநீக்கிக்,
கரனோடு தூடணன்தன் உயிரைவாங்கி **
சிலைவணக்கி மான்மறிய எய்தான்தன்னைத் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
தலைவணக்கிக் கைகூப்பி ஏத்தவல்லார் ,
திரிதலால் தவமுடைத்துத் தரணிதானே 10-5

தனமருவு வைதேகி பிரியலுற்றுத் ,
தளர்வெய்திச் சடாயுவை வைகுந்தத்தேற்றி *
வனமருவு கவியரசன் காதல்கொண்டு ,
வாலியைகொன்று இலங்கைநகர் அரக்கர்கோமான் **
சினமடங்க மாருதியால் சுடுவித்தானைத் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
இனிதமர்ந்த அம்மானை இராமன்தன்னை ,
ஏத்துவார் இணையடியே ஏத்தினேனே 10-6

குரைகடலை அடலம்பால் மறுகவெய்து ,
குலைகட்டி மறுகரையை அதனாலேறி *
எரிநெடுவேல் அரக்கரொடும் இலங்கைவேந்தன் ,
இன்னுயிர்கொண்டு அவன்தம்பிக்கு அரசுமீந்து **
திருமகளோடு இனிதமர்ந்த செல்வன்தன்னைத் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடம் தன்னுள் *
அரசமர்ந்தான் அடிசூடும் அரசையல்லால் ,
அரசுஆக எண்ணேன் மற்றரசுதானே 10-7

அம்பொனெடு மணிமாட அயோத்தியெய்தி அரசெய்தி ,
அகத்தியன்வாய்த்தான் முன்கொன்றான் தன் *
பெருந்தொல் கதைக்கேட்டு மிதிலைச்செல்வி ,

உலகுய்யத் திருவயிறு வாய்த்தமக்கள் **
செம்பவளத்திரள்வாய்த் தன்சரிதைகேட்டான் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள் *
எம்பெருமான் தன்சரிதை செவியால்கண்ணால்
பருகுவோம், இன்னமுதம் மதியோமின்றே 10-8

செறிதவச்சம்புகன் தன்னைச் சென்றுகொன்று ,
செழுமறையோன் உயிர்மீட்டுத் தவத்தோனீந்த *
நிறைமணிப்பூணணியும்கொண்டு இலவணன்தன்னைத்,
தம்பியால்வானேற்றி முனிவன்வேண்ட **
திறல்விளங்கும் இலக்குமனைப் பிரிந்தான்தன்னைத் ,
தில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னுள்
உறைவானை * மறவாத உள்ளந்தன்னை
உடையோம் , மற்றுறு துயரம் அடையோமின்றே 10-9

§ அன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றி ,
அடலரவப் பகையேறி அசுரர்தம்மைவென்று *
இலங்குமணி நெடுந்தோள் நான்கும்தோன்ற ,
விண்முழுதும் எதிர்வரத்தன் தாமம்மேவி **
சென்றுஇனிது வீற்றிருந்த அம்மான்தன்னைத் ,
தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் *
என்றும்நின்றான் அவனிவன் என்றேத்தி , நாளும்
இறைஞ்சுமினோ எப்பொழுதும் தொண்டீர் !நீரே 10-10

§ தில்லைநகர்த் திருச்சித்ரகூடந்தன்னுள் ,
திறல்விளங்கு மாருதியோடு அமர்ந்தான்தன்னை *
எல்லையில்சீர்த் தயரதன்தன் மகனாய்த் தோன்றிற்று
அதுமுதலாத் , தன்னுலகம் புக்கதீறா **
கொல்லியலும் படைத்தானைக் கொற்றவொள்வாள் ,
கோழியர்கோன் குடைக்குலசேகரன் சொற்செய்த *
நல்லியலின் தமிழ்மாலை பத்தும்வல்லார் ,
நலந்திகழ் நாரணனடிக்கீழ் நண்ணுவாரே 10-11

# திருச்சந்தவிருத்தம்

தருச்சந்தப் பொழில் தழுவு , தாரணியின் துயர்தீர *
திருச்சந்தவிருத்தம்செய் , திருமழிசைப்பரன் வருமூர்*
கருச்சந்தும்காரகிலும், கமழ்கோங்கும் மணநாறும்*
திருச்சந்தத்துடன் மருவு, திருமழிசைவளம்பதியே.

உலகும்மழிசையும் உள்ளுணர்ந்து* தம்மில்
புலவர் புகழ்க்கோலால் தூக்க*- உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும்* மாநீர்மழிசையே *
வைத்தெடுத்த பக்கம்வலிது.

அரங்கனே! தரங்க நீர், கலங்க அன்று குன்றுசூழ் *
மரங்கள் தேயமாநிலம்குலுங்க, மாசுணம் சுலாய் **
நெருங்க நீ கடைந்தபோது, நின்ற சூரர் என்செய்தார்?*
குரங்கையாளுகந்த எந்தை! * கூறுதேற வேறிதே 21

வானகமும் மண்ணகமும் வெற்பும் ஏழ்கடல்களும் *
போனகம்செய்து ஆலிலைத்துயின்ற, புண்டரீகனே! **
தேனகஞ்செய் தண்ணறும், மலர்த்துழாய் நன்மாலையாய் *
கூனகம் புகத்தெறித்த, கொற்றவில்லியல்லையே? 30

காலநேமிகாலனே!,கணக்கிலாதகீர்த்தியாய் *
ஞாலமேழும் உண்டு, பண்டு ஓர் பாலனாய பண்பனே **
வேலைவேவ வில்வளைத்த, வெல்சினத்த வீர! * நின்
பாலராய பத்தர்சித்தம், முத்தி செய்யும் மூர்த்தியே! 31

குரக்கினப்படை கொடு, குரை கடலின் மீது போய் *
அரக்கர் அங்கரங்க, வெஞ்சரம் துரந்த ஆதி நீ **
இரக்கமண்கொடுத்தவற்கு, இரக்கமொன்றுமின்றியே *
பரக்க வைத்தளந்து கொண்ட, பற்பபாதனல்லையே? 32

மின்னிறத்து எயிற்றரக்கன் வீழ, வெஞ்சரம் துரந்து *
பின்னவற்கு அருள்புரிந்து, அரசளித்த பெற்றியோய் **
நன்னிறத்தொர் இன்சொல்ஏழை , பின்னைகேள்வ! மன்னுசீர்*
பொன்னிறத்தவண்ணனாய, புண்டரீகனல்லையே? 33

வெற்பெடுத்து வேலை நீர், கலக்கினாய் ,அதன்றியும் *
வெற்பெடுத்து வேலை நீர், வரம்புகட்டி, வேலைசூழ் **
வெற்பெடுத்த இஞ்சிசூழ், இலங்கை கட்டழித்த நீ *
வெற்பெடுத்து மாரிகாத்த, மேகவண்ணனல்லையே! 39

§ கொண்டைகொண்டகோதைமீது, தேனுலாவு கூனிகூன் *
உண்டைகொண்டு அரங்கவோட்டி, உள்மகிழ்ந்த நாதனூர் **
நண்டையுண்டு நாரைபேர, வாளைபாய, நீலமே *
அண்டைகொண்டு கெண்டைமேயும், அந்தணீரரங்கமே 49

வெண்திரைக்கருங்கடல், சிவந்துவேவ முன்னோர்நாள் *
திண்திறல் சிலைக்கைவாளி, விட்டவீரர் சேருமூர் **
எண்திசைக்கணங்களும், இறைஞ்சியாடுதீர்த்தநீர் *
வண்டிரைத்த சோலைவேலி, மன்னுசீரரங்கமே. 50

சரங்களைத்துரந்து, வில்வளைத்து இலங்கைமன்னவன்
சிரங்கள் பத்தறுத்துதிர்த்த, செல்வர்மன்னு பொன்னிடம் **
பரந்து பொன்னிரந்துநுந்தி, வந்தலைக்கும் வார்புனல் *
அரங்கமென்பர், நான்முகத்தயன்பணிந்த கோயிலே. 51

இலைத்தலைச்சரந்துரந்து, இலங்கை கட்டழித்தவன் *
மலைத்தலைப் பிறந்திழிந்து, வந்து நுந்து சந்தனம் **
குலைத் தலைத்திறுத்தெறிந்த, குங்குமக் குழம்பினோடு *
அலைத்தொழுகு காவிரி, அரங்கமேய அண்ணலே. 54

இலங்கை மன்னனைந்தொடைந்து, பைந்தலைநிலத்துக *
கலங்கஅன்று சென்றுகொன்று,வென்றிகொண்டவீரனே **
விலங்கு நூலர் வேதநாவர், நீதியான கேள்வியார் *
வலங்கொளக் குடந்தையுள், கிடந்தமாலுமல்லையே? 56

மரம் பொதச்சரந்துரந்து, வாலி வீழ முன்னொர்நாள் *
உரம்பொதச் சரந்துரந்த, உம்பராளி எம்பிரான் **
வரம் குறிப்பில் வைத்தவர்க்கு, அலாது வானமாளிலும் *
நிரம்பு நீடுபோகம், எத்திறத்தும் யார்க்குமில்லையே 73

கடைந்து பாற்கடல் கிடந்து, காலநேமியைக்கடிந்து *
உடைந்த வாலிதன்தனக்கு, உதவ வந்து இராமனாய் **
மிடைந்த ஏழ் மரங்களும், அடங்கவெய்து * வேங்கடம்
அடைந்த மாலபாதமே, அடைந்து நாளும் உய்ம்மினோ 81

பண்ணுலாவு மென்மொழிப், படைத்தடங்கணாள் பொருட்டு
எண்ணிலா அரக்கரை, நெருப்பினால் நெருக்கினாய் **
கண்ணலால் ஓர்கண்ணிலேன், கலந்தசுற்றம் மற்றிலேன் *
எண்ணிலாத மாய! நின்னை, என்னுள் நீக்கல் என்றுமே 91

சுரும்பரங்கு தண்துழாய், துதைந்தலர்ந்த பாதமே *
விரும்பிநின்று இறைஞ்சுவேற்கு, இரங்கு அரங்கவாணனே *
கரும்பிருந்த கட்டியே, கடல்கிடந்த கண்ணனே *
இரும்பரங்க வெஞ்சரம், துரந்தவில்லி ராமனே 93

விள்விலாத காதலால், விளங்கு பாதபோதில் வைத்து *
உள்ளுவேன தூனநோய், ஒழிக்குமா தெழிக்கு நீர் **
பள்ளிமாய! பன்றியாய, வென்றி வீர! * குன்றினால்
துள்ளுநீர் வரம்புசெய்த, தோன்றல்! ஒன்றுசொல்லிடே 102

கடுங்கவந்தன் வக்கரன், கரன் முரன் சிரம்மவை *
இடந்து கூறு செய்த, பல்படைத்தடக்கை மாயனே! **
கிடந்திருந்து நின்றியங்குபோதும், நின்ன பொற்கழல் *
தொடர்ந்து விள்விலாததோர், தொடர்ச்சி நல்கவேண்டுமே 104

மாறுசெய்த வாளரக்கன், நாளுலப்ப * அன்றிலங்கை
நீறுசெய்து சென்று கொன்று, வென்றிகொண்ட வீரனார்**
வேறுசெய்து தம்முள் என்னை, வைத்திடாமையால் * நமன்
கூறுசெய்து கொண்டிறந்த, குற்றம் எண்ணவல்லனே? 116

## *திருமாலை*

மற்றொன்றும்வேண்டா மனமே மதிளரங்கர் *
கற்றினம்மேய்த்த கழலிணைக்கீழ் * உற்ற
திருமாலைப்பாடும்சீர்த் தொண்டரடிப்பொடியெம் *
பெருமானை எப்பொழுதும்பேசு.

புலையறமாகிநின்ற , புத்தொடுசமணமெல்லாம் *
கலையறக்கற்றமாந்தர் , காண்பரோகேட்பரோதாம்? **
தலையறுப்புண்டும்சாவேன் , சத்தியம்காண்மின்ஐயா *
சிலையினால்இலங்கைசெற்ற , தேவனே தேவனாவான் 7

ஒருவில்லால் ஓங்குமுந்நீரடைத்து , உலகங்களுய்ய *
செருவிலேஅரக்கர்கோனைச் , செற்ற நம்சேவகனார் **
மருவியபெரியகோயில் , மதிள்திருவரங்கமென்னா *
கருவிலே திருவிலாதீர்! , காலத்தைக்கழிக்கின்றீரே 11

## *திருப்பள்ளியெழுச்சி*

தமேவ மத்வா பரவாஸுதே3வம்
ரங்கே3ஶயம் ராஜவத3ர்ஹணீயம் ।
ப்ரபோ3த4கீம் யோடக்ருத ஸூக்திமாலாம்
ப4க்தாங்க்4ரி ரேணும் ப4க3வந்தமீடே3 ॥

மண்டங்குடியென்பர் மாமறையோர் மன்னியசீர் *
தொண்டரடிப்பொடி தொன்னகரம் *
வண்டுதிணர்த்தவயல் தென்னரங்கத்தம்மானைப் *
பள்ளிஉணர்த்தும் பிரானுதித்தவூர்.

மேட்டிளமேதிகள் தளைவிடும் ஆயர்கள் ,
வேய்ங்குழலோசையும் விடைமணிக்குரலும் *
ஈட்டிய இசைதிசை பரந்தன வயலுள் ,
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை **
வாட்டிய வரிசிலை வானவரேறே ! ,
மாமுனி வேள்வியைக்காத்து * அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம்மரசே ! ,
அரங்கத்தம்மா ! பள்ளியெழுந்தருளாயே. 4

## *அமலனாதிபிரான்*

ஆபாத3 சூட3 மநுபூ4ய ஹரிம் ஶயாநம்

மத்4யே கவேரது3ஹிதுர்முதி3தாந்தராத்மா।
அத்3ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிஶ்சிகாய மநவை முநிவாஹநந் தம்.॥

காட்டவேகண்ட பாதகமலம் நல்லாடைஉந்தி *
தேட்டருமுதரபந்தம் திருமார்புகண்டம் செவ்வாய் *
வாட்டமில்கண்கள்மேனி முனியேறித்தனிபுகுந்து *
பாட்டினால்கண்டுவாழும் பாணர்தாள்பரவினோமே.

உவந்த உள்ளத்தனாய் , உலகமளந்து அண்டமுற *
நிவந்தநீள்முடியன் , அன்றுநேர்ந்த நிசாசரரை **
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் , கடியார்பொழில் அரங்கத்தம்மான் *
அரைச்சிவந்தஆடையின்மேல் , சென்றதாம் என் சிந்தனையே 2

சதுரமாமதிள்சூழ் , இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி* ஓர்வெங்கணை உய்த்தவன் , ஓதவண்ணன் **
மதுரமாவண்டுபாட , மாமயிலாடரங்கத்தம்மான் * திருவயிற்று
உதரபந்தம் , என்னுள்ளத்துள் நின்றுஉலாகின்றதே 4

## பெரிய திருமொழி

கலயாமி கலித்$_4$வம்ஸம் கவிம் லோகதி$_3$வாகரம் ।
யஸ்யகோ$_3$பி ப்ரகாஸாபி$_4$ராவித்$_3$யம் நிஹதம் தம: ॥

வாழிபரகாலன் வாழிகலிகன்றி ,
வாழிகுறையலூர்வாழ் வேந்தன் - வாழியரோ ,
மாயோனைவாள்வலியால் மந்திரம் கொள் , மங்கையர்கோன்
தூயோன்சுடர்மானவேல்.

நெஞ்சுக்கிருள்கடிதீபம்டங்கா நெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதம் ,தமிழ்நன்னூல்துறைகள்
அஞ்சுக்கிலக்கியம் ஆரணசாரம் ,பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறி , பரகாலன்பனுவல்களே.

எங்கள்கதியே ! இராமாநுசமுனியே ! ,
சங்கைகெடுத்தாண்டதவராசா , -பொங்குபுகழ்
மங்கையர்கோனீந்தமறையாயிரமனைத்தும் ,
தங்குமனம் நீ எனக்குத்தா.

வாலிமாவலத்து ஒருவனது உடல்கெட ,
வரிசிலை வளைவித்து * அன்று
ஏலம் நாறு தண்தடம்பொழிலிடம்பெற,
இருந்தநல் இமயத்துள் **

ஆலிமாமுகிலதிர்தர அருவரை,
அகடுற முகடேறி *
பீலிமாமயில் நடஞ்செயும் தடஞ்சுனைப் ,
பிரிதிசென்றடை நெஞ்சே I-2-1

கலங்கமாக்கடல் அரிகுலம் பணிசெய்ய,
அருவரை அணைகட்டி *
இலங்கைமாநகர் பொடிசெய்த அடிகள்தாம்,
இருந்த நல் இமயத்து **
விலங்கல்போல் வனவிறல் இருஞ்சினத்தன,
வேழங்கள் துயர்கூர *
பிலங்கொள் வாளெயிற்று அரியவை திரிதரு ,
பிரிதிசென்றடை நெஞ்சே! 1-2-2

ஏனமுனாகி இருநிலமிடந்து ,
அன்றுஇணையடி இமையவர் வணங்க *
தானவனாகம் தரணியில்புரளத் ,
தடஞ்சிலை குனித்த என்தலைவன் **
தேனமர் சோலைக்கற்பகம் பயந்த ,
தெய்வ நல்நறுமலர் கொணர்ந்து *
வானவர் வணங்கும் கங்கையின்கரைமேல் ,
வதரியாச்சிராமத்துள்ளானே 1-4-1

கானிடை உருவைச்சுடுசரம் துரந்து ,
கண்டுமுன் கொடுந்தொழில்உரவோன் *
ஊனுடையகலத்து அடுகணை குளிப்ப ,
உயிர்கவர்ந்துகந்த எம்ஒருவன் **
தேனுடைக்கமலத்து அயனொடு தேவர் ,
சென்று சென்றிறைஞ்சிட * பெருகு
வானிடை முதுநீர்க்கங்கையின்கரைமேல் ,
வதரியாச்சிராமத்துள்ளானே. 1-4- 2

இலங்கையும்கடலும் அடலருந்துப் பின் ,
இருநிதிக்கிறைவனும் * அரக்கர்
குலங்களும் கெட முன்கொடுந்தொழில்புரிந்த
கொற்றவன், கொழுஞ்சுடர்சுழன்ற**
விலங்கலில் உரிஞ்சிமேல் நின்றவிசும்பில் ,
வெண்துகிற்கொடியென விரிந்து *

வலந்தரு மணிநீர்க்கங்கையின்கரைமேல் ,
        வதரியாச்சிராமத்துள்ளானே 1-4-3

மான்முனிந்து ஒருகால்வரிசிலை வளைத்த ,
        மன்னவன் பொன்னிறத்து உரவோன் *
ஊன்முனிந்து அவனதுடல் இருபிளவா ,
        உகிர்நுதிமடுத்து ** அயன் அரனைத்
தான் முனிந்திட்ட , வெந்திறல்சாபம் தவிர்த்தவன் * தவம் புரிந்து
உயர்ந்த மாமுனிகொணர்ந்த கங்கையின்கரைமேல் ,
        வதரியாச்சிராமத்துள்ளானே. 1-4- 8

கலையும் கரியும் பரிமாவும் ,
        திரியும் கானம் கடந்துபோய் *
சிலையும்கணையும் துணையாகச் ,
        சென்றான் வென்றிச்செறுக்களத்து **
மலைகொண்டு அலைநீரணைகட்டி *
        மதிள் நீரிலங்கைவாளரக்கர்
தலைவன் * தலைபத்து அறுத்துகந்தான்
        சாளக்கிராமம் அடைநெஞ்சே! I-5 1

கடம்சூழ்கரியும் பரிமாவும் ,
        ஒலி மாந்தேரும் காலாளும் *
உடன்சூழ்ந்தெழுந்த கடியிலங்கை ,
        பொடியா வடிவாய்ச்சரம்துரந்தான்**
இடம்சூழ்ந்து எங்கும் இருவிசும்பில் ,
        இமையோர் வணங்க மணம்கமழும் *
தடம்சூழ்ந்து எங்கும்அழகாய ,
        சாளக்கிராமம் அடைநெஞ்சே! I-5- 2

ஊரான்குடந்தையுத்தமன் ,
        ஒருகால் இருகால்சிலைவளைய *
தேரா அரக்கர் தேர்வெள்ளம்செற்றான் ,
        வற்றா வருபுனல்சூழ்
பேரான் ** பேராயிரம் உடையான் ,
        பிறங்குசிறை வண்டு அறைகின்ற
தாரான் * தாராவயல் சூழ்ந்த ,
        சாளக்கிராமம் அடைநெஞ்சே! 1-5-4

அடுத்தார்த்தெழுந்தாள் பிலவாய் விட்டலற ,
அவள் மூக்கு அயில்வாளால்
விடுத்தான் * விளங்குசுடராழி ,
விண்ணோர்பெருமான், நண்ணார்முன்**
கடுத்தார்த்தெழுந்த பெருமழையைக் ,
கல்லொன்று ஏந்தி இனநிரைக்காத்
தடுத்தான் * தடம்சூழ்ந்து அழகாய ,
சாளக்கிராமம் அடைநெஞ்சே! 1-5-5

வண் கையான் அவுணர்க்கு நாயகன் , வேள்வியில் சென்று மாணியாய்*
மண் கையால் இரந்தான் , மராமரம் ஏழும் எய்த வலத்தினான் **
எண்கையான் இமயத்துள்ளான் , இருஞ்சோலைமேவிய எம்பிரான்*
திண் கைம்மா துயர் தீர்த்தவன் , திருவேங்கடம் அடைநெஞ்சமே! 185

கண்ணார் கடல் சூழ் , இலங்கைக்கு இறைவன் தன்*
திண்ணாகம் பிளக்கச் , சரம் செல உய்த்தாய்!**
விண்ணோர் தொழும் , வேங்கடமாமலை மேய *
அண்ணா!, அடியேன் இடரைக்களையாயே. 1-10-1

இலங்கைப்பதிக்கு , அன்று இறையாய * அரக்கர்
குலம்கெட்டு அவர்மாளக், கொடிப்புள் திரித்தாய்! **
விலங்கல்குடுமித் , திருவேங்கடம்மேய *
அலங்கல் துளபமுடியாய்!, அருளாயே. 1-10- 2

காசையாடை மூடியோடிக் , காதல் செய்தானவனூர் *
நாசமாக நம்பவல்ல, நம்பி நம்பெருமான் *
வேயினன்ன தோள்மடவார், வெண்ணெயுண்டான் இவனென்று *
ஏசநின்ற எம்பெருமான், எவ்வுள்கிடந்தானே. 2-2-1

தையலாள்மேல் காதல்செய்த , தானவன் வாளரக்கன்*
பொய்யிலாத பொன்முடிகள், ஒன்பதோடொன்றும் ** அன்று
செய்த வெம்போர்தன்னில், அங்கோர் செஞ்சரத்தால்உருள*
எய்தஎந்தை எம்பெருமான் , எவ்வுள் கிடந்தானே. 2-2-2

முன் ஓர்தூது , வானரத்தின் வாயில்மொழிந்து * அரக்கன்
மன்னூர் தன்னை, வாளியினால் மாள முனிந்து ** அவனே
பின் ஓர்தூது , ஆதி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் *
இன்னார்தூதன் எனநின்றான் , எவ்வுள் கிடந்தானே. 2-2-3

விற்பெருவிழவும் கஞ்சனும்மல்லும் ,
வேழமும் பாகனும் வீழ *
செற்றவன்தன்னை, புரமெரிசெய்த ,
சிவனுறு துயர்களை தேவை **
பற்றலர் வீயக்கோல் கையில் கொண்டு,
பார்த்தன்தன் தேர்முன் நின்றானை *
சிற்றவை பணியால் முடிதுறந்தானைத்,
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 2-3-1

பரதனும் தம்பி சத்துருக்கனனும்,
இலக்குமனோடு மைதிலியும் *
இரவும் நன்பகலும் துதிசெய்யநின்ற ,
இராவணாந்தகனை எம்மானை **
குரவமேகமழும் குளிர்பொழிலூடு ,
குயிலொடு மயில்கள் நின்றால *
இரவியின் கதிர்கள் நுழைதல்செய்தறியாத் ,
திருவல்லிக்கேணிக்கண்டேனே. 2-3-7

மாலும் கடலார மலைக்குவடிட்டு அணைகட்டி ,
வரம்புருவ மதிசேர் *
கோலமதிளாய இலங்கைகெடப் ,
படைதொட்டு ஒருகால் அமரில்அதிர **
காலம் இதுவென்று அயன்வாளியினால் ,
கதிர் நீள்முடிபத்தும் அறுத்துஅமரும் *
நீலமுகில்வண்ணர் எமக்கிறைவற்கு
இடம் , மாமலையாவது நீர்மலையே. 2-4- 5

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக் ,
கிளர்பொறிய மறிதிரிய அதனின் பின்னே
படர்ந்தானை * படுமதத்த களிற்றின்கொம்பு
பறித்தானைப் , பாரிடத்தை எயிறுகீற
இடந்தானை ** வளை மருப்பின் ஏனமாகி ,
இருநிலனும் பெருவிசும்பும் எய்தாவண்ணம்
கடந்தானை * எம்மானைக்கண்டுகொண்டேன் ,
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே 2-5-6

தொண்டாயர்தாம்பரவும் அடியினானை ,
படிகடந்த தாளாளற்கு ஆளாய் உய்தல்
விண்டானை * தென்னிலங்கையரக்கர் வேந்தை ,
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்களாண்டு **
பண்டாய வேதங்கள் நான்கும் , ஐந்து
வேள்விகளும், கேள்வியோடு அங்கமாறும்
கண்டானை * தொண்டனேன் கண்டுகொண்டேன் ,
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 2-5-9

விண்டாரைவென்று , ஆவி விலங்குண்ண * மெல்லியலார்
கொண்டாடுமல்லகலம், அழலேற வெஞ்சமத்துக்
கண்டாரை ** கடல்மல்லைத் தலசயனத்து உறைவாரை *
கொண்டாடும் நெஞ்சுடையார், அவர்எங்கள்குலதெய்வமே 2-6- 4

தன்குடிக்குஏதும் தக்கவா நினையாள்,
தடங்கடல் நுடங்கெயிலிலங்கை*
வன்குடிமடங்க வாளமர் தொலைத்த,
வார்த்தை கேட்டு இன்புறும்மயங்கும்**
மின்கொடிமருங்குல் சுருங்கமேல்நெருங்கி ,
மென்முலை பொன்பயந்திருந்த *
என்கொடியிவளுக்கு என்நினைந்திருந்தாய்?,
இடவெந்தை எந்தைபிரானே 2-7-6

குடைத்திறல் மன்னவனாய் , ஒருகால்
குரங்கைப் படையா * மலையால்கடலை
அடைத்தவன் எந்தைபிரானது இடம் ,
மணிமாடங்கள்சூழ்ந்து அழகாயகச்சி **
விடைத்திறல் வில்லவன் நென்மெலியில் ,
வெருவச்செருவேல் வலங்கைப் பிடித்த *
படைத்திறல் பல்லவர்கோன் பணிந்த ,
பரமேச்சுரவிண்ணகரமதுவே. 2-9-8

தாங்கரும்போர் மாலிபடப் பறவையூர்ந்து ,
தராதலத்தோர் குறைமுடித்த தன்மையானை *
ஆங்குஅரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூரும் ,
அடியவர்கட்கு ஆரமுதமானான் தன்னை **
கோங்கரும்பு சுரபுன்னை குரவார்சோலைக் ,

குழாவரி வண்டிசைபாடும் பாடல்கேட்டு *
தீங்கரும்பு கண்வளரும் கழனிசூழ்ந்த ,
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. 2-10-4

கறைவளர் வேல் கரன் முதலாக்கவந்தன் வாலி ,
கணையொன்றினால் மடிய இலங்கைதன்னுள்*
பிறையெயிற்று வாளரக்கர் சேனையெல்லாம் ,
பெருந்தகையோடு உடன் துணித்த பெம்மான்தன்னை **
மறைவளரப் புகழ்வளர மாடந்தோறும் ,
மண்டபம் ஒண்தொளி அனைத்தும் வாரமோத *
சிறையணைந்த பொழிலைணைந்த தென்றல் வீசும் ,
திருக்கோவலூரதனுள் கண்டேன் நானே. 2-10-5

கூனுலாவிய மடந்தை தன் கொடுஞ்சொலின் திறத்து,இளகொடியோடும்*
கானுலாவிய கருமுகில் திருநிறத்தவனிடம் , கவினாரும் **
வானுலாவிய மதிதவழ் மால்வரை, மாமதிள் புடை சூழ *
தேனுலாவிய செழும்பொழில் தழுவிய, திருவயிந்திரபுரமே. 3-1-6

மின்னின் நுண்ணிடை மடக்கொடிகாரணம், விலங்கலின் மிசை இலங்கை
மன்னன் * நீள்முடி பொடிசெய்தமைந்தனதிடம், மணிவரை நீழல் **
அன்ன மாமலரரவிந்தத்தமளியில் , பெடையொடும் இனிதமர *
செந்நெலார் கவரிக்குலைவீசுதண், திருவயிந்திரபுரமே. 3-1-7

நெய்வாயழல் அம்பு துரந்து , முந்நீர்
துணியப் பணிகொண்டு அணியார்ந்து * இலங்கு
மையார் மணிவண்ணனை எண்ணி , நுந்தம்
மனத்தே இருத்தும்படி வாழவல்லீர் **
அவ்வாய் இளமங்கையர் பேசவும்தான் ,
அருமாமறையந்தணர் சிந்தைபுக *
செவ்வாய்க்கிளி நான்மறை பாடு , தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே 3-2-6

பைங்கண்விறல் செம்முகத்து வாலிமாளப் ,
படர்வனத்துக் கவந்தனொடும் படையார்திண்கை *
வெங்கண்விறல் விராதன் உகவிற்குனித்த ,
விண்ணவர்கோன் தாளணைவீர்! ** வெற்புப்போலும்
துங்கமுகமாளிகைமேல் ஆயங்கூறும் ,

துடியிடையார் முகக்கமலச் சோதிதன்னால்*
திங்கள்முகம் பனிபடைக்கும் அழகார் , காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே 3-4-6

பொருவில் வலம்புரியரக்கன் முடிகள்பத்தும் ,
புற்றுமறிந்தன போலப்புவிமேல்சிந்த*
செருவில் வலம்புரிசிலைக்கை மலைத்தோள் வேந்தன் ,
திருவடி சேர்ந்து உய்கிற்பீர் ** திரை நீர்த்தெள்கி
மருவி வலம்புரி கைதைக்கழியூடாடி ,
வயல்நண்ணி மழைதரு நீர்தவழ்கால்மன்னி *
தெருவில் வலம்புரிதரளம் ஈனும் , காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. 3-4-7

நீடுபல்மலர்மாலையிட்டு, நின்னிணையடிதொழுதேத்தும் * என்மனம்
வாட நீ நினையேல், மரமெய்தமாமுனிவா! **
பாடலின் ஒலிசங்கினோசைபரந்து , பல்பணையால்மலிந்து * எங்கும்
ஆடலோசையறா , அணியாலியம்மானே! 3-5-5

முற்றிலும் பைங்கிளியும் , பந்தும் ஊசலும், பேசுகின்ற *
சிற்றில்மென் பூவையும் விட்டகன்ற , செழுங்கோதைதன்னைப்
பெற்றிலேன் ** முற்றிழையை , பிறப்பிலி பின்னேநடந்து *
மற்றெல்லாம் கைதொழப்போய், வயலாலிபுகுவர்கொலோ? 3-7- 8

சிறையார் உவணப்புள்ளொன்றுஏறி , அன்று
திசைநான்கும் நான்கும்இரிய , செருவில்
கறையார் நெடுவேலரக்கர் மடியக் ,
கடல்சூழ் இலங்கைகடந்தான் இடந்தான் **
முறையால் வளர்க்கின்ற முத்தீயர்நால்வேதர் ,
ஐவேள்வியாறங்கர் ஏழினிசையோர் *
மறையோர்வணங்கப் புகழெய்து நாங்கூர்,
மணிமாடக்கோயில் வணங்கு என்மனனே! 3-8-4

கலையிலங்கும் அகலல்குல் அரக்கர்குலக்கொடியைக்,
காதொடுமூக்குடன் அரியக்கதறி அவளோடி *
தலையில் அங்கைவைத்து மலையிலங்கை புகச்செய்த ,
தடந்தோளன் மகிழ்ந்து இனிதுமருவியுறை கோயில் **
சிலையிலங்கு மணிமாடத்து உச்சிமிசைச்சூலம் ,

செழுங்கொண்டல் அகடிரியச்சொரிந்த செழுமுத்தம் *
மலையிலங்கு மாளிகைமேல் மலிவெய்து நாங்கூர்,
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே ! 3-9-4

மின்னனைய நுண்மருங்குல் மெல்லியற்கா , இலங்கை
வேந்தன் முடியொருபதும் தோளிருபதும்போயுதிர*
தன்னிகரில் சிலைவளைத்து அன்றிலங்கை பொடிசெய்த,
தடந்தோளன் மகிழ்ந்து இனிதுமருவியுறை கோயில்**
செந்நெலொடு செங்கமலம் சேல்கயல்கள் வாளை,
செங்கழுநீரொடு மிடைந்து கழனிதிகழ்ந்தெங்கும் *
மன்னுபுகழ் வேதியர்கள் மலிவெய்துநாங்கூர்,
வைகுந்தவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே! 3-9-5

வாள் நெடுங்கண் மலர்க்கூந்தல் மைதிலிக்கா, இலங்கை
மன்னன் முடியொருபதும் தோளிருபதும்போயுதிர*
தாள்நெடுந்திண்சிலைவளைத்த தயரதன்சேய் , என்தன்
தனிச்சரண் வானவர்க்கரசு கருதுமிடம், தடமார் **
சேணிடங்கொள் மலர்க்கமலம் சேல்கயல்கள்வாளை,
செந்நெலொடு மடுத்தரியஉதிர்ந்தசெழுமுத்தம் *
வாள்நெடுங்கண் கடைசியர்கள்வாருமணி நாங்கூர்,
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே! 3-10- 6

வாராரும் இளங்கொங்கை, மைதிலியை மணம்புணர்வான் *
காரார்திண்சிலையிறுத்த, தனிக்காளை கருதுமிடம் **
ஏராரும்பெருஞ்செல்வத்து, எழில்மறையோர் நாங்கைதன்னுள்
சீராரும் மலர்பொழில்சூழ், திருத்தேவனார்தொகையே. 4-1- 8

கம்பமாகடலடைத்து இலங்கைக்கு மன் , கதிர்முடியவைபத்தும்
அம்பினாலறுத்து * அரசுஅவன்தம்பிக்கு அளித்தவனுறைகோயில்**
செம்பலாநிரை செண்பகம் மாதவி, சூதகம் வாழைகள்சூழ்,
வம்புலாம் கமுகோங்கியநாங்கூர், வண்புருடோத்தமமே. 4-2-1

தீமனத்தரக்கர் திறலழித்தவனே! என்று ,
சென்றடைந்தவர் தமக்கு *
தாய்மனத்திரங்கி அருளினைக் கொடுக்கும் ,
தயரதன் மதலையைச் சயமே **
தேமலர்ப்பொழில்சூழ் நாங்கை நன்னடுவுள் ,
செம்பொன்செய் கோயிலினுள்ளே *

காமனைப்பயந்தான் தன்னை  நான்அடியேன் ,
கண்டுகொண்டுய்ந்தொழிந்தேனே. 4-3-5

மல்லைமா முந்நீர் அதர்பட ,  மலையால் அணைசெய்து மகிழ்ந்தவன்
தன்னை* கல்லின்மீது இயன்ற கடிமதிள் இலங்கை கலங்க,  ஓர்
வாளிதொட்டானை **
செல்வ நான்மறையோர்  நாங்கை நன்னடுவுள் ,
செம்பொன்செய் கோயிலினுள்ளே *
அல்லிமாமலராள்  தன்னொடும் அடியேன்,
கண்டுகொண்டல்லல் தீர்ந்தேனே. 4-3-6

தான் போலும் என்றெழுந்தான் தரணியாளன்,
அதுகண்டு தரித்திருப்பான் , அரக்கர் தங்கள்*
கோன்போலும் என்றெழுந்தான் குன்றமன்ன,
இருபதுதோளுடன் துணித்த ஒருவன் கண்டீர்**
மான்போலும் மென்னோக்கின் செய்யவாயார்,
மரகதம்போல் மடக்கிளியைக்கைமேல் கொண்டு *
தேன்போலும் மென்மழலை பயிற்றும் நாங்கூர்த்,
திருத்தெற்றியம்பலத்து என்செங்கண்மாலே 4-4-6

கவ்வை வாளெயிற்றுவன்பேய்க் , கதிர்முலைசுவைத்து * இலங்கை
வவ்விய இடும்பைகூரக் , கடுங்கணை துரந்த எந்தை **
கொவ்வை வாய்மகளிர்கொங்கைக் , குங்குமம்கழுவிப்போந்த *
தெய்வநீர்கமழும் நாங்கூர்த், திருமணிக்கூடத்தானே 4-5-2

கருமகள் இலங்கையாட்டி , பிலங்கொள்வாய்  திறந்து * தன்மேல்
வருமவள் செவியும் மூக்கும் , வாளினால் தடிந்தஎந்தை **
பெருமகள் பேதைமங்கை , தன்னொடும்  பிரிவிலாத *
திருமகள் மருவும் நாங்கூர்த் ,  திருமணிக்கூடத்தானே 4-5-5
உருத்தெழு வாலிமார்வில் , ஒரு கணை உருவோட்டி *
கருத்துடைத்தம்பிக்கு , இன்பக்கதிர் முடியரசு அளித்தாய்**
பருத்தெழுபலவும் மாவும், பழம்விழுந்து ஒழுகும்நாங்கைக்*
கருத்தனே! காவளந்தண்பாடியாய்!, களைகண் நீயே 4-6-3

முனைமுகத்து அரக்கன்மாள, முடிகள் பத்தறுத்துவீழ்த்து *ஆங்கு
அனையவற்கு இளையவற்கே , அரசளித்து அருளினானே! **
சுனைகளில் கயல்கள்பாயச், சுரும்புதேன் நுகரும்நாங்கை *
கனைகழல் காவளந்தண்பாடியாய்!, களைகண் நீயே 4-6-4

கல்லால்கடலை , அணைகட்டிஉகந்தாய் *
நல்லார்பலர் , வேதியர்மன்னிய நாங்கூர்ச்**
செல்வா!, திருவெள்ளக்குளத்து உறைவானே*
எல்லாவிடரும் , கெடுமாறு அருளாயே 4-7-6

கொல்லையானாள் பரிசழிந்தாள், கோல்வளையார் தம்முகப்பே *
மல்லைமுந்நீர் தட்டிலங்கை , கட்டழித்த மாயனென்றும் **
செல்வம்மல்கு மறையோர்நாங்கைத் , தேவதேவன் என்றென்றோதி*
பல்வளையாள் என்மடந்தை, பார்த்தன்பள்ளி பாடுவாளே 4-8-4

அரக்கராவி மாளஅன்று , ஆழ்கடல் சூழிலங்கை செற்ற *
குரக்கரசன் என்றும் , கோலவில்லி என்றும் ** மாமதியை
நெருக்குமாட நீடு நாங்கை, நின்மலன் என்றென்றோதி *
பரக்கழிந்தாள் என்மடந்தை, பார்த்தன்பள்ளி பாடுவாளே 4-8-5

ஆநிரைமேய்த்து அன்று அலைகடலடைத்திட்டு ,
அரக்கர் தம்சிரங்களையுருட்டி *
கார் நிறை மேகம்கலந்தோர் உருவக் ,
கண்ணனார் கருதியகோயில் **
பூநிரைச்செருந்தி புன்னை முத்தரும்பிப் ,
பொதும்பிடை வரிவண்டுமிண்டி *
தேனிரைத்துண்டு அங்கு இன்னிசை முரலும் ,
திருவெள்ளியங்குடியதுவே 4-10-2

காற்றிடைப் பூளை கரந்தனஅரந்தையுறக் ,
கடலரக்கர் தம் சேனை *
கூற்றிடைச்செல்லக் கொடுங்கணை துரந்த ,
கோலவில்லி இராமன் தன்கோயில் *
ஊற்றிடைநின்ற வாழையின்கனிகள் ,
ஊழ்த்துவீழ்ந்தன உண்டுமண்டி *
சேற்றிடைக்கயல்கள்உகள் திகழ்வயல்சூழ் ,
திருவெள்ளியங்குடியதுவே 4-10-6

மேவாஅரக்கர் தென்னிலங்கை , வேந்தன் வீயச்சரம்துரந்து *
மாவாய்பிளந்து மல்லடர்த்து , மருதம் சாய்த்தமாலதிடம் **
காவார்தெங்கின் பழம்வீழக் , கயல்கள்பாயக் குருகிரியும் *
பூவார்கழனி எழிலாரும் , புள்ளம் பூதங்குடிதானே 5-1-3

வெற்பால் மாரிபழுதாக்கி , விறல் வாளரக்கர் தலைவன்தன் *
வற்பார்திரள்தோள் ஐந்நாங்கும், துணித்த வல்வில்இராமனிடம்**
கற்பார்புரிசை செய்குன்றம், கவினார் கூடம்மாளிகைகள் *
பொற்பார்மாடம் எழிலாரும், புள்ளம் பூதங்குடிதானே 5-1-4

ஆறினோடு ஒரு நான்குடைநெடுமுடி , அரக்கன் தன் சிரமெல்லாம் *
வேறுவேறுக வில்லது வளைத்தவனே! , எனக்கருள்புரியே **
மாறில்சோதிய மரதகப்பாசடைத் , தாமரைமலர் வார்ந்த *
தேறல்மாந்தி வண்டு இன்னிசைமுரல், திருவெள்ளறை நின்றானே.

விளைத்த வெம்போர், விறல் வாளரக்கன் நகர்பாழ்பட *
வளைத்த வல்வில்தடக்கையவனுக்கு , இடமென்பரால்**
துளைக்கை யானைமருப்பும், அகிலும்கொணர்ந்துந்தி * முன்
திளைக்கும் செல்வப்புனல் காவிரிசூழ் , தென்னரங்கமே 5-4-4

வம்புலாம் கூந்தல்மண்டோதரிகாதலன் , வான்புக *
அம்புதன்னால் முனிந்த , அழகனிடம்என்பரால் **
உம்பர்கோனும் உலகேழும் , வந்தீண்டி வணங்கும் * நல்
செம்பொனாரும் மதிள்சூழ்ந்து , அழகார் தென்னரங்கமே 5-4-5

கலையாளா அகலல்குல் , கனவளையும்
கையாளா என்செய்கேன் நான்? *
விலையாளா அடியேனை , வேண்டுதியோ?
வேண்டாயோ? என்னும் ** மெய்ய
மலையாளன் வானவர்தம் தலையாளன்,
மராமரமேழெய்த வென்றிச்
சிலையாளன் * என் மகளைச்செய்தனகள் ,
எங்ஙனம் நான்சிந்திக்கேனே 5-5-2

சுரிகுழல்கனிவாய்த் திருவினைப்பிரித்த,
கொடுமையிற்கடுவிசை அரக்கன் *
எரிவிழித்திலங்கு மணிமுடிபொடிசெய்து ,
இலங்கைபாழ்படுப்பதற்கெண்ணி **
வரிசிலைவளைய அடிசரம்துரந்து ,
மறிகடல் நெறிபட * மலையால்
அரிகுலம்பணிகொண்டு அலைகடலடைத்தான் ,
அரங்கமாநகரமர்ந்தானே 5-7-7

ஊழியாய்ஓமத்துச்சியாய் , ஒருகால்
உடைய தேரொருவனாய் * உலகில்
சூழிமால் யானைத்துயர் கெடுத்து , இலங்கை
மலங்கஅன்று அடுசரம் துரந்து **
பாழியால் மிக்கபார்த்தனுக்கருளிப் ,
பகலவன் ஒளிகெட * பகலே
ஆழியால் அன்றங்கு ஆழியை மறைத்தான் ,
அரங்கமா நகரமர்ந்தானே 5-7-8

ஏழைஏதலன் கீழ்மகன் என்னாது
இரங்கி , மற்றவற்கு இன்னருள்சுரந்து *
மாழைமான் மடநோக்கி உன்தோழி ,
உம்பிஎம்பி என்றொழிந்திலை ** உகந்து
தோழன் நீயெனக்கு இங்கொழியென்ற
சொற்கள் வந்து , அடியேன் மனத்திருந்திட *
ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன் ,
அணிபொழில் திருவரங்கத்தம்மானே!. 5-8-1

வாதமாமகன்மர்க்கடம் விலங்கு ,
மற்றோர்சாதியொன்றொழிந்திலை * உகந்து
காதலாதரம் கடலினும்பெருகச் , செய்
தகவினுக்கு இல்லை கைம்மாறென்று **
கோதில் வாய்மையினாயொடும், உடனே
உண்பன்நானென்ற ஒண்பொருள் * எனக்கும்
ஆதல்வேண்டுமென்று அடியிணையடைந்தேன் ,
அணிபொழில் திருவரங்கத்தம்மானே! 5-8-2

விலங்கலால் கடலடைத்து , விளங்கிழைபொருட்டு * வில்லால்
இலங்கை மாநகர்க்கிறைவன் , இருபதுபுயம் துணித்தான் **
நலங்கொள் நான்மறைவல்லார்கள் , ஒத்தொலியேத்தக் கேட்டு *
மலங்குபாய் வயல்திருப்பேர் , மருவி நான் வாழ்ந்தவாறே! 5-9-6

பிறையினொளி எயிறிலக முறுகியெதிர் பொருதுமென ,வந்தஅசுரர்*
இறைகளவை நெறுநெறென வெறிய அவர் வயிறழல , நின்ற பெருமான்**
சிறைகொள் மயில் குயில் பயில மலர்களுக அளி முரல , அடிகொள்நெடுமா *
நறைசெய்பொழில் மழைதவழும் , நந்திபுரவிண்ணகரம் நண்ணு மனமே! 5.10.4

மூளஎரி சிந்திமுனிவெய்தி அமர்செய்துமென, வந்தஅசுரர்*
தோளும் அவர்தாளுமுடியோடு பொடியாக , நொடியாமளவெய்தான்*
வாளும்வரிவில்லும்வளையாழி கதைசங்கமிவை,அங்கைஉடையான்*
நாளும் உறைகின்றநகர் , நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே! 510-5

தம்பியொடு தாமொருவர் தன் துணைவி, காதல் துணையாக முன நாள்*
வெம்பியெரிகானகம் உலாவுமவர்தாம் , இனிதுமேவு நகர்தான்**
கொம்புகுதி கொண்டு குயில்கூவ மயிலாலும் , எழிலார் புறவுசேர் *
நம்பியுறைகின்ற நகர் , நந்திபுரவிண்ணகரம் நண்ணுமனமே! 5-10-6

மற்றோர் தெய்வம் எண்ணேன் , உன்னை என் மனத்துவைத்துப்
பெற்றேன் * பெற்றதுவும் , பிறவாமை எம்பெருமான்! **
வற்றா நீள்கடல்சூழ் , இலங்கை இராவணனைச்
செற்றாய் * கொற்றவனே!, திருவிண்ணகரானே! 6-3-5

மின்னேரிடையார் , வேட்கையை மாற்றியிருந்து *
என்நீர் இருமி , எம்பால்வந்தது? என்றிகழாத முன் **
தொன்னீரிலங்கை மலங்க , விலங்கெரியூட்டினான்*
நன்னீர் நறையூர் , நாம்தொழுதும் எழுநெஞ்சமே! 6-4-6

ஆனைப்புரவித் , தேரொடுகாலாளணிகொண்ட *
சேனைத்தொகையைச் சாடி , இலங்கை செற்றானூர்**
மீனைத்தழுவி வீழ்ந்தெழும் , மள்ளர்க்கு அலமந்து *
நானப்புதலில் , ஆமையொளிக்கும் நறையூரே 6-5-3

ஆளும் பணியும் அடியேனைக்கொண்டான் ,
விண்ட நிசாசரரை *
தோளும் தலையும் துணிவெய்தச் ,
சுடுவெஞ்சிலை வாய்ச்சரந்துரந்தான் **
வேளும் சேயும் அனையாரும் ,
வேற்கணாரும் பயில்வீதி *
நாளும் விழவினொலியோவா ,
நறையூர் நின்ற நம்பியே 6-7-1

தெள்ளார் கடல்வாய் விடவாய ,
சினவாளரவில் துயிலமர்ந்து *
துள்ளாவரு மான்விழ , வாளிதுரந்தான், இரந்தான் மாவலிமண் **

புள்ளார்புறவில் பூங்காவி ,
புலன்கொள்மாதர் கண்காட்ட *
நள்ளார்கமலம் முகங்காட்டும் ,
நறையூர் நின்ற நம்பியே 6-7-3

கல்லார்மதிள்சூழ், கடியிலங்கைக்காரரக்கன் *
வல்லாகம்கீள, வரிவெஞ்சரம்துரந்த
வில்லானை ** செல்வ விபீடணற்கு, வேறாக *
நல்லானைநாடி, நறையூரில்கண்டேனே 6-8-5

கழியாரும் கனசங்கம், கலந்துஎங்கும் நிறைந்தேறி *
வழியாரமுத்தீன்று, வளங்கொடுக்கும் திருநறையூர் **
பழியாரும் விறலரக்கன் , பருமுடிகளவைசிதற *
அழலாறும் சரம்துரந்தான், அடியிணையே அடைநெஞ்சே! 6-9-2

கிடந்தநம்பி குடந்தை மேவிக் , கேழலாயுலகை
இடந்தநம்பி * எங்கள் நம்பி,எறிஞர் அரணழிய **
கடந்தநம்பி கடியாரிலங்கை , உலகை ஈரடியால் *
நடந்தநம்பி நாமம் சொல்லில் , நமோ நாராயணமே 6-10-1

கல்லார் மதிள்சூழ் , கச்சிநகருள்நச்சிப் * பாடகத்துள்
எல்லாவுலகும் வணங்க, இருந்த அம்மான் ** இலங்கைக்கோன்
வல்லாளாகம் , வில்லால் முனிந்த எந்தை * விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில் , நமோ நாராயணமே 6-10-4

குடையாவரையால் , நிரைமுன் காத்தபெருமான் * மருவாத
விடை தானேழும்வென்றான் , கோவல்நின்றான் ** தென்னிலங்கை
அடையா அரக்கர்வீயப்பொருது , மேவிவெங்கூற்றம் *
நடையாவுண்ணக்கண்டான் நாமம் , நமோ நாராயணமே 6-10-5

கான எண்கும் குரங்கும் , முசுவும்படையா * அடலரக்கர்
மானமழித்து நின்ற , வென்றியம்மான் ** எனக்கு என்றும்
தேனும் பாலும் அமுதுமாய , திருமால் திருநாமம் *
நானும் சொன்னேன் நமரும் உரைமின் , நமோ நாராயணமே 6-10-6

வில்லேர்நுதல் , வேல்நெடுங்கண்ணியும் நீயும் *
கல்லார் கடுங்கானம் , திரிந்தகளிறே! **
நல்லாய்! நரநாரணனே! , எங்கள் நம்பி *
சொல்லாய் உன்னை , யான் வணங்கித்தொழுமாறே 7-1-5

சினவில் செங்கணரக்கர் உயிர்மாளச்,
செற்றவில்லியென்று கற்றவர்தந்தம்
மனமுள் கொண்டு * என்றும் எப்போதும் நின்றேத்தும்
மாமுனியை , மரமேழ் எய்தமைந்தனை **
நனவில்சென்றார்க்கும் நண்ணற்கரியானை ,
நான் அடியேன் நறையூர் நின்ற நம்பியை *
கனவில்கண்டேன் இன்றுகண்டமையால் , என்
கண்ணிணைகள் களிப்பக்களித்தேனே! 7-3-1

உரங்களால் இயன்ற மன்னர்மாளப் ,
பாரதத்து ஒருதேர் ஐவர்க்காய்ச் சென்று *
இரங்கியூர்ந்து அவர்க்கு இன்னருள் செய்யும்
எம்பிரானை , வம்பார் புனல் காவிரி **
அரங்கமாளி என்னாளி விண்ணாளி ,
ஆழிசூழிலங்கை மலங்கச்சென்று *
சரங்களாண்ட தண்தாமரைக்கண்ணனுக்கன்றி ,
என் மனம் தாழ்ந்து நில்லாதே 7-3-4

என்செய்கேன் அடியேன்? உரையீர் , இதற்கு என்றும்
என் மனத்தே இருக்கும் புகழ் *
தஞ்சையாளியைப் பொன்பெயரோன் ,
நெஞ்சம் அன்று இடந்தவனைத் தழலேபுரை **
மின்செய் வாளரக்கன் நகர்பாழ்படச் ,
சூழ்கடல்சிறை வைத்து, இமையோர் தொழும் *
பொன்செய் மால்வரையை மணிக்குன்றினைஅன்றி ,
என் மனம் போற்றியென்னாதே 7-3-9

மீதோடி வாளெயிறு மின்னிலக ,
முன்விலகும் உருவினாளை *
காதோடு கொடிமூக்கு அன்று உடனறுத்த ,
கைத்தலத்தா! என்று நின்று **
தாதோடு வண்டலம்பும், தண்சேறை
எம்பெருமான் தாளையேத்தி *
போதோடு புனல் தூவும் புண்ணியரே ,
விண்ணவரில் பொலிகின்றாரே 7-4-3

தேராளும் வாளரக்கன் , தென்னிலங்கை
வெஞ்சமத்துப்பொன்றி வீழ *
போராளும் சிலையதனால் , பொருகணைகள்
போக்குவித்தாய் என்று ** நாளும்
தாராளும் வரைமார்பன் , தண்சேறை
எம்பெருமான் உம்பராளும் *
பேராளன் பேரோதும் பெரியோரை ,
ஒருகாலும் பிரிகிலேனே 7-4-4

செம்பொன்மதிள்சூழ்தென்னிலங்கைக்கிறைவன் , சிரங்கள் ஐயிரண்டும்
உம்பர்வாளிக்கு இலக்காக , உதிர்த்தவுரவோன் ஊர் போலும் **
கொம்பிலார்ந்த மாதவிமேல் , கோதி மேய்ந்த வண்டினங்கள் *
அம்பராவும்கண்மடவார் , ஐம்பாலணையும் அழுந்தூரே 7-5-3

உடையானை, ஒலிநீருலகங்கள் படைத்தானை *
விடையானோட அன்று , விறலாழி விசைத்தானை **
அடையார் தென்னிலங்கையழித்தானை , அணியழுந்தூர்
உடையானை * அடியேன் , அடைந்துய்ந்து போனேனே 7-6-3

பந்தணைந்த மெல்விரலாள் சீதைக்காகிப்,
பகலவன் மீதியங்காத இலங்கைவேந்தன் *
அந்தமில் திண்கரம் சிரங்கள் புரண்டுவீழ.
அடுகணையால் எய்துகந்த அம்மான் காண்மின்**
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்,
திசைமுகனை அனையவர்கள் செம்மைமிக்க *
அந்தணர்தம் ஆகுதியின் புகையார் செல்வத்து
அணியழுந்தூர் நின்றுகந்த அமரர்கோவே. 7-8-7

வாமனன் கற்கி , மதுசூதன் மாதவன் *
தார்மன்னுதாசரதியாய, தடமார்வன் **
காமன் தன்தாதை , கண்ணபுரத்தெம்பெருமான் *
தாமநறுந்துழாய் , தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 8-4-7

நீல மலர்கள் , நெடுநீர்வயல்மருங்கில் *
சால மலரெல்லாம் , ஊதாதே ** வாளரக்கர்
காலன் , கண்ணபுரத்தெம்பெருமான் கதிர்முடிமேல் *
கோல நறுந்துழாய் , கொண்டூதாய் கோல்தும்பீ! 8-4-8

ஏழுமாமரம் துளைபடச்சிலைவளைத்து ,
இலங்கையை மலங்குவித்த
ஆழியான் * நமக்கருளிய அருளொடும் ,
பகலெல்லை கழிகின்றதால் **
தோழி! நாம் இதற்கென் செய்தும்?,
துணையில்லை , சுடர்படுமுதுநீரில் *
ஆழஆழ்கின்ற ஆவியை , அடுவதோர்
அந்திவந்தடைகின்றதே! 8-5-5

முரியும் வெண்திரை முதுகயம்தீப்பட ,
முழங்கழலெரியம்பின் *
வரிகொள்வெஞ்சிலை வளைவித்த ,
மைந்தனும் வந்திலன் என்செய்கேன் **
எரியும் வெங்கதிர்துயின்றது ,
பாவியேன் இணை நெடுங்கண்துயிலா *
கரியநாழிகை ஊழியின்பெரியன ,
கழியுமாறு அறியேனே! 8-5-6

கலங்கமாக்கடல் கடைந்தடைத்து ,,
இலங்கையர்கோனது வரையாகம்
மலங்க * வெஞ்சமத்து அடுசரம் துரந்த ,
எம்மடிகளும் வாரானால் **
இலங்கு வெங்கதிரிளமதி அதனொடும் ,
விடைமணியடும் * ஆயன்
விலங்கல்வேயினது ஓசையுமாய் ,
இனி விளைவதொன்று அறியேனே! 8-5-7

தொண்டீர்! உய்யும்வகை கண்டேன் , துளங்காஅரக்கர்துளங்க * முன்
திண்தோள் நிமிரச்சிலைவளையச் , சிறிதே முனிந்த திருமார்பன் **
வண்டார் கூந்தல் மலர்மங்கை, வடிக்கண்மடந்தை மான்நோக்கம்
கண்டாள் * கண்டு கொண்டுகந்த கண்ணபுரம் நாம்தொழுதுமே. 8-6-1

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப் , பொன்ற அன்று புள்ளூர்ந்து *
பெருந்தோள்மாலி தலைபுரளப் , பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை **
இருந்தார் தம்மையுடன் கொண்டு, அங்கு எழிலார் பிலத்துப்புக்கொளிப்ப *
கருந்தாள் சிலைகைக்கொண்டானூர், கண்ணபுரம் நாம்தொழுதுமே.8-6- 2

வல்லியிடையாள் பொருட்டாக , மதிள்நீரிலங்கையார் கோவை *
அல்லல் செய்து வெஞ்சமத்துள் , ஆற்றல் மிகுத்த ஆற்றலான் **
வல்லாளரக்கர் குலப்பாவை வாட, முனி தன்வேள்வியை *
கல்விச்சிலையால் காத்தானூர் , கண்ணபுரம் நாம்தொழுதுமே.8-6-3

மல்லை முந்நீர் அதர்பட, வரிவெஞ்சிலை கால்வளைவித்து *
கொல்லைவிலங்கு பணிசெய்யக் , கொடியோன் இலங்கை புகலுற்று **
தொல்லைமரங்கள் புகப்பெய்து , துவலை நிமிர்ந்துவானணவ *
கல்லால் கடலையடைத்தானூர் , கண்ணபுரம் நாம்தொழுதுமே.8-6-4

ஆமையாகி அரியாகி , அன்னமாகி * அந்தணர் தம்
ஓமமாகி ஊழியாகி, உலகு சூழ்ந்த நெடும்புணரி **
சேமமதிள் சூழிலங்கைக்கோன் , சிரமும் கரமும்துணித்து * முன்
காமற்பயந்தான் கருதுமூர் , கண்ணபுரம் நாம்தொழுதுமே 8-6-5

வருந்தாதிரு நீ மடநெஞ்சே! , நம்மேல் வினைகள்வாரா * முன்
திருந்தாஅரக்கர் தென்னிலங்கை , செந்தீயுண்ணச் சிவந்து ஒரு நாள் **
பெருந்தோள் வாணற்கு அருள் புரிந்து , பின்னைமணாளனாகி * முன்
கருந்தாள் களிறொன்றொசித்தானூர் , கண்ணபுரம் நாம்தொழுதுமே86- 6

இலையார் மலர்ப்பூம்பொய்கைவாய் , முதலைதன்னால் அடர்ப்புண்டு *
கொலையார்வேழம் நடுக்குற்றுக்குலைய , அதனுக்கு அருள் புரிந்தான் **
அலைநீரிலங்கைத் தசக்கிரீவற்கு , இளையோற்கு அரசையருளி * முன்
கலைமாச்சிலையால் எய்தானூர் , கண்ணபுரம் நாம்தொழுதுமே 8-6-7

தொண்டரும் அமரரும் , முனிவரும் தொழுதெழ *
அண்டமொடு அகலிடம் , அளந்தவர் அமர்செய்து **
விண்டவர் பட , மதிளிலங்கைமுன் எரியெழ *
கண்டவர் கணபுரம் , அடிகள்தம் இடமே. 8-7-5

வையமெல்லாம் உடன்வணங்க , வணங்கா மன்னனாய்த் தோன்றி ,
வெய்ய சீற்றக்கடியிலங்கை , குடிகொண்டோட வெஞ்சமத்து **
செய்தவெம்போர் நம்பரனைச் , செழுந்தண்கானல் மணநாறும் *
கைதை வேலிக்கண்ணபுரத்து , அடியேன் கண்டுகொண்டேனே.8-8-7

வானுளாரவரை வலிமையால் நலியும் ,
மறிகடல் இலங்கையார்கோனை *
பானுநேர்சரத்தால் பனங்கனிபோலப் ,
பருமுடியுதிர வில்வளைத்தோன் **

கானுலாமயிலின் கணங்கள் நின்றாடக் ,
கணமுகில் முரசம் நின்றதிர *
தேனுலா வரிவண்டு இன்னிசை முரலும் ,
திருக்கண்ணங்குடியுள் நின்றானே. 9-1-7

கலையுலாவல்குல் காரிகை திறத்துக் ,
கடல்பெரும்படையொடும் சென்று *
சிலையினால் இலங்கை தீயெழச்செற்ற,
திருக்கண்ணங்குடியுள் நின்றானை **
மலைகுலாமாட மங்கையர்தலைவன் ,
மானவேல்கலியன் வாயொலிகள் *
உலவுசொல்மாலை ஒன்பதோடொன்றும் ,
வல்லவர்க்கு இல்லை நல்குரவே. 9-1-10

வில்லால் இலங்கைமலங்கச் , சரம்துரந்த *
வல்லாளன் பின்போன , நெஞ்சம்வருமளவும் **
எல்லாரும் என்தன்னை , ஏசிலும்பேசிடினும் *
புல்லாணியெம்பெருமான் , பொய்கேட்டிருந்தேனே 9-4-5

செற்றவன் தென்னிலங்கைமலங்கத் ,
தேவர்பிரான் திருமாமகளைப்
பெற்றும் * என்னெஞ்சகம் கோயில்கொண்ட
பேரருளாளன் , பெருமைபேசக்
கற்றவன் ** காமருசீர்க்கலியன் ,
கண்ணகத்தும் மனத்தும் அகலாக்
கொற்றவன் *முற்றுலகாளி நின்ற ,
குறுங்குடிக்கே என்னைஉய்த்திடுமின். 9-5-10

சிரமுனைந்தும் ஐந்தும் , சிந்தச்சென்று * அரக்கன்
உரமும்கரமும் துணித்த, உரவோனூர் போலும் **
இரவும்பகலும் , ஈன்தேன் முரல * மன்றெல்லாம்
குரவின் பூவேதான் , மணநாறும் குறுங்குடியே 9-6-4

சிலையால் இலங்கை செற்றான் , மற்றோர் சினவேழம் *
கொலையார் கொம்புகொண்டான் மேய, குறுங்குடிமேல் **
கலையார் பனுவல்வல்லான் , கலியனொலிமாலை *
நிலையார் பாடல்பாடப் , பாவம் நில்லாவே. 9-6-10

சூர்மயிலாய பேய்முலை சுவைத்துச் ,
சுடுசரம் அடுசிலைத்துரந்து *
நீர்மையிலாத தாடகைமாள ,
நினைந்தவர் மனம்கொண்ட கோயில் **
கார்மலிவேங்கை கோங்கலர்புறவில் ,
கடிமலர்க்குறிஞ்சியின் நறுந்தேன் *
வார்புனல்சூழ் தண்மாலிருஞ்சோலை ,
வணங்குதும்வா மடநெஞ்சே! 9-8-4

வணங்கலிலரக்கன் செருக்களத்தவிய ,
மணிமுடி ஒருபதும்புரள *
அணங்கெழுந்தவன் தன்கவந்தம் நின்றாட ,
அமர்செய்த அடிகள்தம் கோயில் **
பிணங்கலில் நெடுவேய் நுதிமுகம் கிழிப்பப் ,
பிரசம் வந்திழிதர * பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ்சோலை ,
வணங்குதும்வா மடநெஞ்சே! 9-8-5

காவலன் இலங்கைக்கிறைகலங்கச் ,
சரம்செலவுய்த்து * மற்றவன்
ஏவலம் தவிர்த்தான் ,
என்னையாளுடை எம்பிரான் **
நாவலம் புவிமன்னர் வந்துவணங்க,
மாலுறைகின்றது இங்கென *
தேவர் வந்திறைஞ்சும்,
திருக்கோட்டியூரானே 9-10-6

அங்குஅவ்வானவர்க்கு ஆகுலம் தீர ,
அணியிலங்கை அழித்தவன்தன்னை *
பொங்குமாவலவன் கலிகன்றி ,
புகன்ற பொங்கத்தம்கொண்டு ** இவ்வுலகில்
எங்கும்பாடி நின்றாடுமின் தொண்டீர்! ,
இம்மையே இடரில்லை * இறந்தால்
தங்குமூர் அண்டமே கண்டுகொண்மின் ,
சாற்றினோம்தடம் பொங்கத்தம்பொங்கோ! 10-2-10

ஞாலமாளும் உங்கள்கோமான், எங்கள்இரவணற்கு *
காலனாகிவந்தவா!, கண்டஞ்சிக்கருமுகில்போல் **
நீலன்வாழ்க சுடேணன் வாழ்க, அங்கதன் வாழ்கவென்று *
கோலமாகஆடுகின்றோம், குழமணிதூரமே 10-3-3

மணங்கள்நாறும் வார்குழலார், மாதர்களாதரத்தை *
புணர்ந்த சிந்தைப்புன்மையாளன், பொன்ற, வரிசிலையால் **
கணங்களுண்ண வாளியாண்ட, காவலனுக்கிளையோன்*
குணங்கள்பாடி ஆடுகின்றோம், குழமணிதூரமே 10-3-4

கல்லின் முந்நீர்மாற்றிவந்து, காவல்கடந்து * இலங்கை
அல்லல்செய்தான் உங்கள்கோமான் , எம்மைஅமர்க்களத்து **
வெல்லகில்லாது அஞ்சினோம்காண் , வெங்கதிரோன்சிறுவா! *
கொல்லவேண்டா ஆடுகின்றோம் , குழமணிதூரமே 10-3-6

கவளயானை பாய்புரவி, தேரோடு அரக்கரெல்லாம்
துவள * வென்றவென்றியாளன், தன்தமர்கொல்லாமே **
தவளமாட நீடயோத்திக் , காவலன்தன் சிறுவன் *
குவளைவண்ணன் காணஆடீர், குழமணிதூரமே 10-3-8

ஏடொத்தேந்தும் நீளிலைவேல் , எங்களிரவணனார்
ஓடிப்போனார் * நாங்கள் எய்த்தோம் , உய்வதோர்காரணத்தால் **
சூடிப்போந்தோம் உங்கள்கோமனாணை, தொடரேன்மின் *
கூடிகூடி ஆடுகின்றோம், குழமணிதூரமே 10-3-9

படைத்திட்டது இவ்வையம் உய்யமுனநாள்,
பணிந்தேத்தவல்லார் துயராயவெல்லாம் *
துடைத்திட்டு அவரைத்தனக்காக்கவென்னத்,
தெளியாஅரக்கர் திறல்போயவிய **
மிடைத்திட்டெழுந்த குரங்கைப்படையா ,
விலங்கல்புகப்பாய்ச்சிவிம்ம * கடலை
அடைத்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால் ,
அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவனே 10-6-7

நெறித்திட்ட மென்கூழை நல்நேரிழையோடு ,
உடனாய வில்லென்ன வல்லேயதனை*
இறுத்திட்டு அவளின்பம் அன்போடணைந்திட்டு,
இளங்கொற்றவனாய்த் துளங்காதமுந்நீர் *

செறித்திட்டு இலங்கைமலங்க அரக்கன் ,
செழுநீள்முடிதோளொடு தாள்துணிய *
அறுத்திட்டவன் காண்மின் இன்றுஆய்ச்சியரால் ,
அளைவெண்ணெயுண்டு ஆப்புண்டிருந்தவனே 10-6-8

சுரிந்திட்ட செங்கேழுளைப் பொங்கரிமாத் ,
தொலையப்பிரியாது சென்றெய்தி * எய்தாது
இரிந்திட்டிடங்கொண்டு அடங்காததன்வாய் ,
இருகூறுசெய்த பெருமான் முனநாள் **
வரிந்திட்டவில்லால் மரமேழுமெய்து *
மலைபோலுருவத்து ஓரிராக்கதி மூக்கு *
அரிந்திட்டவன்காண்மின் இன்று ஆய்ச்சியரால் ,
அளைவெண்ணெய்யுண்டு ஆப்புண்டிருந்தவனே 10-6-9

புள்ளுருவாகி நள்ளிருள் வந்த ,
பூதனைமாள * இலங்கை
ஒள்ளெரிமண்டியுண்ணப் பணித்த ,
ஊக்கமதனை நினைந்தோ? **
கள்ளவிழ் கோதைகாதலும் , எங்கள்
காரிகை மாதர்கருத்தும் *
பிள்ளை தன்கையில் கிண்ணமேயொக்கப் ,
பேசுவது எந்தைபிரானே! 10-9-1

அரக்கியராகம் புல்லெனவில்லால் ,
அணிமதிள் இலங்கையார்கோனை *
செருக்கழித்து அமரர்பணியமுன்னின்ற ,
சேவகமோ? செய்ததின்று **
முருக்கிதழ்வாய்ச்சி முன்கை வெண்-
சங்கம்கொண்டு , முன்னே நின்று போகாய் ,
எருக்கிலைக்காக எறிமழுவோச்சல் ,
என்செய்வது? எந்தைபிரானே! 10-9-6

பொருந்தலன் ஆகம்புள்ளுவந்தேற ,
வள்ளுகிரால்பிளந்து * அன்று
பெருந்தகைக்கு இரங்கி வாலியைமுனிந்த ,
பெருமைகொலோ? செய்ததின்று **
பெருந்தடங்கண்ணி சுரும்புறுகோதை ,

பெருமையை நினைந்திலைபேசில் *
கருங்கடல்வண்ணா! கவுள்கொண்ட நீராம் ,
இவளெனக்கருதுகின்றாயே 10-9-8

குன்றமொன்றெடுத்தேந்தி * மாமழை
அன்று காத்தஅம்மான் ** அரக்கரை
வென்றவில்லியார் , வீரமேகொலோ? *
தென்றல்வந்து , தீவீசும் என்செய்கேன்? 11-1-1

சென்று வார்சிலைவளைத்து , இலங்கையை *
வென்றவில்லியார் , வீரமேகொலோ **
முன்றில் பெண்ணைமேல் , முளரிக்கூட்டகத்து **
அன்றிலின்குரல் , அடரும்என்னையே! 11-1-6

பொருந்துமாமரம் , ஏழும் எய்தபுனிதனார் *
திருந்துசேவடி , என்மனத்து நினைதொறும் **
கருந்தண்மாகடல் , கங்குலார்க்கும், அதுவன்றியும் *
வருந்த வாடைவரும், இதற்கு இனியென்செய்கேன்? 11-2-4

இலைமலி பள்ளியெய்தி இதுமாயமென்ன ,
இனமாய மான்பின் எழில்சேர் *
அலைமலி வேற்கணாளை அகல்விப்பதற்கு ,
ஒருருருவாய மானையமையா *
கொலைமலி எய்துவித்த கொடியோனிலங்கை,
பொடியாக வென்றியமருள் *
சிலைமலி செஞ்சரங்கள் செலவுய்த்த, நங்கள்
திருமால் நமக்கு ஓரரணே. 11-4-7

கொலைகெழு செம்முகத்த களிறொன்று கொன்று ,
கொடியோனிலங்கை பொடியா *
சிலைகெழு செஞ்சரங்கள் செலவுய்த்த நங்கள் ,
திருமாலை , வேலைபுடைசூழ் **
கலிகெழுமாடவீதி வயல்மங்கை மன்னு ,
கலிகன்றி சொன்ன பனுவல் *
ஒலிகெழுபாடல் பாடி உழல்கின்ற தொண்டரவர்
ஆள்வர் உம்பருலகே 11-4-10

மானமரு மென்னோக்கி , வைதேவி இன்துணையா *
கானமரும் கல்லதர்போய்க் , காடுறைந்தான் காணேடீ! **
கானமரும் கல்லதர்போய்க் , காடுறைந்த பொன்னடிக்கள் *
வானவர்தம் , சென்னி மலர்கண்டாய் சாழலே! 11-5-1

## திருக்குறுந்தாண்டகம்

காற்றினைப் புனலைத்தீயைக் , கடிமதிளிலங்கை செற்ற
ஏற்றினை * இமயம் மேய , எழில்மணித் திரளை ** இன்ப
ஆற்றினை அமுதந்தன்னை , அவுணன் ஆருயிரையுண்ட
கூற்றினை * குணங்கொண்டுள்ளம்! , கூறு நீ கூறுமாறே. 2

முன்பொலா இராவணன்தன், முதுமதிளிலங்கை வேவித்து *
அன்பினால் அனுமன்வந்து, ஆங்கடியிணை பணியநின்றார்க்கு **
என்பெலாம் உருகியுக்கிட்டு , என்னுடை நெஞ்சமென்னும் *
அன்பினால் ஞானநீர்கொண்டு , ஆட்டுவன் அடியனேனே. 15

மாயமான் மாயச்செற்று, மருதிறநடந்து * வையம்
தாயமாபரவை பொங்கத் , தடவரை திரித்து * வானோர்க்கு
ஈயுமால் எம்பிரானார்க்கு ,என்னுடைச் சொற்களென்னும் *
தூயமாமாலை கொண்டு , சூட்டுவன்தொண்டனேனே 16

## திருநெடுந்தாண்டகம்

கல்லெடுத்துக் கல்மாரிகாத்தாய்! என்றும்,
காமரு பூங்கச்சியூரகத்தாய்! என்றும் *
வில்லிறுத்து மெல்லியல்தோள்தோய்ந்தாய்! என்றும்,
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே! என்றும் **
மல்லடர்த்து மல்லரை அன்று அட்டாய்! என்றும்,
மாகீண்ட கைதலத்து என்மைந்தா! என்றும் *
சொல்லெடுத்துத் தன்கிளியைச்சொல்லே என்று ,
துணைமுலைமேல் துளிசோரச்சோர்கின்றாளே! 13

கன்றுமேய்த்து இனிதுகந்தகாளாய்! என்றும் ,
கடிபொழில்சூழ்கணபுரத்து என்கனியே! என்றும் *
மன்றமரக்கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும் ,
வடதிருவேங்கடம் மேயமைந்தா! என்றும் **
வென்றசுரர் குலங்களைந்த வேந்தே! என்றும்

விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும் *
துன்றுகுழல் கருநிறத்து என்துணையே! என்றும் ,
துணைமுலைமேல் துளிசோரச்சோர்கின்றாளே! 16

தேராளும் வாளரக்கன் செல்வம்மாளத் ,
தென்னிலங்கை முன்மலங்கச் செந்தீயொல்கி *
பேராளன் ஆயிரம்தோள் வாணன்மாளப் ,
பொருகடலை அரண்கடந்து புக்குமிக்க
பாராளன் **.பாரிடந்து பாரையுண்டு
பாருமிழ்ந்து பரளந்த பாரையாண்ட
பேராளன், பேரோதும் பெண்ணை மண்மேல் ,
பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே? 20

தென்னிலங்கையரண் சிதறி அவுணன் மாளச் ,
சென்றுலகம் மூன்றினையும் திரிந்தோர் தேரால் *
மன்னிலங்கு பாரதத்தை மாளவூர்ந்த ,
வரையுருவின் மாகளிற்றைத்தோழீ ** என்தன்
பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக்கொண்டு ,
போகாமை வல்லேனாய்ப் புலவியெய்தி *
என்னிலங்கமெல்லாம் வந்து இன்பமெய்த ,
எப்பொழுதும் நினைந்துருகி இருப்பன்நானே. 28

அன்றாயர் குலமகளுக்கு அரையன் தன்னை ,
அலைகடலைக் கடைந்தடைத்த அம்மான்தன்னை *
குன்றாத வலியரக்கர்கோனை மாளக் ,
கொடுஞ்சிலை வாய்ச்சரம் துரந்து குலம்களைந்து
வென்றானை ** குன்றெடுத்த தோளினானை ,
விரிதிரை நீர் விண்ணகரம் மருவிநாளும்
நின்றானை * தண்குடந்தைக்கிடந்த மாலை ,
நெடியானை அடிநாயேன் நினைந்திட்டேனே. 29

# *திருவாய்மொழி*

ப$_4$க்தாம்ருதம் விஸ்வஜநாநுமோத$_3$நம்
ஸர்வார்த்த$_2$த$_3$ம் ஸ்ரீஶட$_2$கோபவாங்க்மயம் ।
ஸஹஸ்ரஶாகோ$_2$பநிஷத்ஸமாக$_3$மம்
நமாம்யஹம் த்$_3$ராவிட$_3$வேத$_3$ஸாக$_3$ரம் ॥

திருவழுதி நாடென்றும் தென் குருகூரென்றும் *
மருவினிய வண்பொருநலென்றும் * அருமறைகள்
அந்தாதி செய்தான் அடியிணையே எம்பொழுதும் *
சிந்தியாய் நெஞ்சே ! தெளிந்து.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர் பேணும் *
இனத்தாரை யல்லா திறைஞ்சேன் * தனத்தாலும்
ஏதும் குறைவிலேன் * எந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடையபற்று.

ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுசமுனிதன் *
வாய்ந்தமலர்ப் பாதம் வணங்குகின்றேன் *
ஆய்ந்தபெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் *
பேராத உள்ளம் பெற.

வான் திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் *
ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் * ஈன்ற
முதல்தாய் சடகோபன் * மொய்ம்பால் வளர்த்த
இதத்தாய் இராமானுசன்.

மிக்கவிறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்
தக்கநெறியும் தடையாகித் - தொக்கியலும் *
ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் குருகையர்கோன் *
யாழினிசை வேதத்தியல்.

மானேய்நோக்கி மடவாளை, மார்வில்கொண்டாய்! மாதவா! *
கூனேசிதைய உண்டைவில், நிறத்தில் தெறித்தாய் ! கோவிந்தா! **
வானோர் சோதிமணிவண்ணா!, மதுசூதா! நீயருளாய் * உன்
தேனேமலரும் திருப்பாதம்,சேருமாறுவினையேனே. 1-5-5

வினையேன்வினைதீர் மருந்தானாய்!, விண்ணோர்தலைவா! கேசவா! *
மனைசேர்ஆயர் குலமுதலே!, மாமாயனே! மாதவா! **
சினையேய் தழைய மராமரங்கள், ஏழும்எய்தாய் சிரீதரா! *
இனையாய் இனையபெயரினாய்!, என்றுநைவன் அடியேனே. 1-5-6

நீள்கடல்சூழ் இலங்கைக்கோன், தோள்கள் தலைதுணிசெய்தான்**
தாள்கள் தலையில் வணங்கி, நாள்கடலைக்கழிமினே. 1-6-7

பிரான், பெருநிலம்கீண்டவன் * பின்னும்
விராய்மலர்த்துழாய், வேய்ந்தமுடியன் **
மராமரம், எய்தமாயவன் * என்னுள்
இரானெனில், பின்னையானொட்டுவேனோ?. 1-7-6

காமுற்ற கையறவோடு, எல்லே!இராப்பகல் *
நீமுற்றக்கண்துயிலாய், நெஞ்சுருகி ஏங்குதியால் **
தீமுற்றத்தென்னிலங்கை, ஊட்டினான் தாள்நயந்த *
யாமுற்றது உற்றாயோ?, வாழிகனைகடலே! . 2-1-3

சேர்ந்தார் தீவினைகட்கு, அருநஞ்சைத்திண்மதியை *
தீர்ந்தார்தம்மனத்துப், பிரியாதவருயிரை **
சோர்ந்தேபோகல் கொடாச்சுடரை, அரக்கியைமூக்கு
ஈர்ந்தாயை * அடியேன் அடைந்தேன், முதல்முன்னமே. 2-3-6

குழாங்கொள்பேரரக்கன், குலம்வீயமுனிந்தவனை *
குழாங்கொள்தென்குருகூர்ச், சடகோபன் தெரிந்துரைத்த **
குழாங்கொளாயிரத்துள், இவைபத்தும்உடன்பாடி *
குழாங்களாய் அடியீருடன், கூடிநின்றாடுமினே. 2-3-11

இரக்கமனத்தோடு, எரியணை *
அரக்கும்மெழுகும், ஒக்கும்இவள் **
இரக்கமெழீர், இதற்குஎன்செய்கேன்? *
அரக்கனிலங்கை, செற்றீருக்கே. 2-4-3

இலங்கைசெற்றவனே!, என்னும் * பின்னும்
வலங்கொள், புள்ளுயர்த்தாய்! என்னும் ** உள்ளம்
மலங்க, வெவ்வுயிர்க்கும் * கண்ணீர்மிகக்
கலங்கிக், கைதொழும்நின்றுஇவளே. 2-4-4

ஏழைபேதை, இராப்பகல் * தன
கேழில், ஒண்கண்ணநீர்கொண்டாள் ** கிளர்
வாழ்வைவேவ , இலங்கை செற்றீர்! ** இவள்
மாழைநோக்கு, ஒன்றும்வாட்டேன்மினே. 2-4-10

பாம்பணைமேல் பாற்கடலுள், பள்ளியமர்ந்ததுவும் *
காம்பணைதோள் பின்னைக்கா, ஏறுடனேழ்செற்றதுவும் **
தேம்பணையசோலை, மராமரமேழ் எய்ததுவும் *
பூம்பிணைய தண்துழாய்ப், பொன்முடியம்போரேறே. 2-5-7

மாறிமாறிப்பலபிறப்பும் பிறந்து,
அடியையடைந்து உள்ளம்தேறி *
ஈறிலின்பத்திருவெள்ளம்,
யான்மூழ்கினன் **
பாறிப்பாறிஅசுரர்தம், பல்குழாங்கள் நீறெழ *
பாய்பறவையொன்று
ஏறிவீற்றிருந்தாய்!,உன்னைஎன்னுள்
நீக்கேல் எந்தாய்!. 2-6-8

எந்தாய்! தண்திருவேங்கடத்துள் நின்றாய்!,
இலங்கைசெற்றாய்! * மராமரம்
பைந்தாளேழுருவ,
ஒருவாளிகோத்தவில்லா! **
கொந்தார் தண்ணந்துழாயினாய்! அமுதே!,
உன்னைஎன்னுள்ளே குழைத்தஎம்மைந்தா! * வானேறே!,
இனி எங்குப்போகின்றதே?. 2-6- 9

ஏறேல்ஏழும்வென்று, ஏர்கொளிலங்கையை *
நீறேசெய்த, நெடுஞ்சுடர்ச்சோதி ! **
தேறேல்என்னை, உன்பொன்னடிச்சேர்த்து ஒல்லை *
வேறேபோக, எஞ்ஞான்றும்விடலே. 2-9- 10

இருடீகேசன்எம்பிரான், இலங்கையரக்கர்குலம் *
முருடுதீர்த்தபிரான் எம்மான், அமரர் பெம்மானென்றென்று **
தெருடியாகில் நெஞ்சே! வணங்கு, திண்ணம் அறிஅறிந்து *
மருடியேலும் விடேல்கண்டாய் * நம்பிபற்பநாபனையே. 2-7-10

மூவராகியமூர்த்தியை, முதல் மூவர்க்கும் முதல்வன்தன்னை *
சாவமுள்ளன நீக்குவானைத், தடங்கடல்கிடந்தான்தன்னைத்**
தேவதேவனைத்தென்னிலங்கை,யெரியெழச்செற்ற வில்லியை *
பாவநாசனைப் , பங்கயத்தடங்கண்ணனைப்பரவுமினோ. 3-6-2

துயரமே தருதுன்பவின்ப வினைகளாய், அவையல்லனாய் *
உயர நின்றதோர் சோதியாய், உலகேழும் உண்டுமிழ்ந்தான் தன்னை **
அயரவாங்கு நமன்தமர்க்கு, அருநஞ்சினை அச்சுதன்தன்னை *
தயரதற்கு மகன்தன்னையன்றி, மற்றிலேன் தஞ்சமாகவே. 3-6-8

நெஞ்சமே!நீள்நகராக, இருந்தஎன்
தஞ்சனே! * தண்ணிலங்கைக்கு, இறையைச்செற்ற
நஞ்சனே! ** ஞாலம்கொள்வான், குறளாகிய
வஞ்சனே! * என்னும்எப்போதும், என்வாசகமே. 3-8-2

சன்மம்பலபலசெய்து வெளிப்பட்டுச்,சங்கொடுசக்கரம்வில் *
ஒண்மையுடைய உலக்கைஒள்வாள், தண்டுகொண்டுபுள்ளூர்ந்து ** உலகில்
வண்மையுடைய அரக்கர், அசுரரைமாளப்படை பொருத *
நன்மையுடையவன் சீர்பரவப்பெற்ற, நான் ஓர்குறைவிலனே. 3-10-1

கொம்புபோல்சீதைபொருட்டு, இலங்கைநகர் *
அம்பெரியுய்த்தவர், தாளிணைமேலணி **
வம்பவிழ்தண்ணந்துழாய் மலர்க்கே, இவள்
நம்புமால் * நான் இதற்கு என்செய்கேன்?, நங்கைமீர்!. 4-2-8

கோவைவாயாள் பொருட்டு, ஏற்றினெருத்தம்இறுத்தாய்! * மதிளிலங்கை
கோவைவீயச்சிலைகுனித்தாய்!, குலநல்யானை மருப்பொசித்தாய்! **
பூவைவீயாநீர்தூவிப், போதால் வணங்கேனேலும் * நின்
பூவை வீயாம்மேனிக்குப், பூசும்சாந்துஎன்நெஞ்சமே. 4-3-1

உண்டும் உமிழ்ந்தும் கடந்தும்இடந்தும், கிடந்தும்நின்றும் *
கொண்டகோலத்தொடு வீற்றிருந்தும், மணங்கூடியும் **
கண்டவாற்றால், தனதேயுலகெனநின்றான் தன்னை *
வண்தமிழ்நூற்க நோற்றேன், அடியார்க்கு இன்பமாரியே. 4-5-10

ஏறாளும் இறையோனும், திசைமுகனும்திருமகளும் *
கூறாளும் தனியுடம்பன், குலங்குலமா அசுரர்களை **
நீறாகும்படியாக, நிருமித்துப்படைதொட்ட *
மாறாளன்கவராத, மணிமாமை குறைவிலமே. 4-8-1

தளிர்நிறத்தால் குறைவில்லாத், தனிச்சிறையில் விளப்புற்ற *
கிளிமொழியாள் காரணமாக், கிளரரக்கன் நகரெரித்த **
களிமலர்த்துழாயலங்கல், கமழ்முடியன் கடல்ஞாலத்து *
அளிமிக்கான்கவராத, அறிவினால்குறைவிலமே. 4-8-5

நீயும் பாங்கல்லைகாண், நெஞ்சமே! நீளிரவும் *
ஓயும்பொழுதின்றி, ஊழியாய் நீண்டதால் **

காயும்கடுஞ்சிலை, என்காகுத்தன் வாரானால் *
மாயும்வகையறியேன், வல்வினையேன் பெண்பிறந்தே. 5-4-3

கொடியவினை யாதுமிலனே என்னும்,
கொடியவினை ஆவேனும்யானேயென்னும் *
கொடியவினை செய்வேனும் யானேயென்னும்,
கொடியவினை தீர்ப்பேனும் யானேயென்னும் **
கொடியானிலங்கை செற்றேனேஎன்னும்,
கொடியபுள்ளுடையவனேறக்கொலோ?*
கொடியஉலகத்தீர்க்கு இவையென்சொல்லுகேன்?,
கொடியேன் கொடி என்மகள் கோலங்களே. 5-6- 9

கருளப்புட்கொடி சக்கரப்படை, வானநாட ! என்கார்முகில்வண்ணா *
பொருளல்லாத என்னைப்பொருளாக்கி,அடிமைகொண்டாய் **
தெருள்கொள் நான்மறைவல்லவர் பலர்வாழ்,சிரீவரமங்கலநகர்க்கு *
அருள்செய்து அங்கிருந்தாய் !,அறியேனொரு கைம்மாறே. 5-7-3

வேறு கொண்டு உம்மையான் இரந்தேன், வெறிவண்டினங்காள்*
தேறுநீர்ப்பம்பை, வடபாலைத்திருவண்வண்டூர்**
மாறில் போரரக்கன், மதிள்நீறெழச்செற்றுகந்த*
ஏறுசேவகனார்க்கு, என்னையும் உள என்மின்களே. 6-1-10

மின்னிடை மடவார்கள் நின்னருள் சூடுவார்,முன்பு நானதஞ்சுவன் *
மன்னுடை இலங்கை, அரண்காய்ந்த மாயவனே!**
உன்னுடைய சுண்டாயம் நான் அறிவன், இனி அது கொண்டு செய்வதென்? *
என்னுடைய பந்தும்கழலும் , தந்துபோகு நம்பீ!. 6-2-1

மாண்பமைகோலத்து, எம்மாயக்குறளற்கு ,
சேண்சுடர்க்குன்றன்ன, செஞ்சுடர்மூர்த்திக்கு **
காண்பெரும்தோற்றத்து, எம்காகுத்தநம்பிக்கு * என்
பூண்புனை மென்முலை, தோற்றது பொற்பே. 6-6-9

ஆவா ! என்னாது உலகத்தைஅலைக்கும் , அசுரர் வாணாள்மேல் *
தீவாய்வாளி மழைபொழிந்தசிலையா ! , திருமாமகள் கேள்வா !
தேவா ! ** சுரர்கள் முனிக்கணங்கள் விரும்பும் , திருவேங்கடத்தானே ! *
பூவார் கழல்கள் அருவினையேன் ,பொருந்துமாறு புணராயே. 6-10-4

புணரா நின்றமரஏழ் , அன்றெய்த ஒரு வில் வலவாவோ ! *
புணரேய் நின்றமரமிரண்டின் , நடுவேபோன முதல்வாவோ ! **

திணரார்மேகம் எனக்களிறுசேரும் , திருவேங்கடத்தானே ! *
திணரார் சார்ங்கத்து உனபாதம் ,சேர்வதடியேன் எந்நாளே ?. 6-10-5

தீர் மருந்தின்றி ஐந்துநோயடும், செக்கிலிட்டுத்திரிக்கும் ஐவரை *
நேர் மருங்குடைத்தாவடைத்து, நெகிழ்ப்பான் ஒக்கின்றாய் **
ஆர் மருந்து இனியாகுவார்?,அடலாழிஏந்தி அசுரர்வன்குலம் *
வேர்மருங்கறுத்தாய்!, விண்ணுளார் பெருமானேயோ!. 7-1-5

வட்கிலள் இறையும் மணிவண்ணா ! என்னும்,
வானமேநோக்கும் மையாக்கும் *
உட்குடையசுரர் உயிரெல்லாம் உண்ட,
ஒருவனே ! என்னும் உள் உருகும் **
கட்கிலீ ! உன்னைக்காணுமாறு அருளாய் ,
காகுத்தா ! கண்ணனே ! என்னும் *
திட்கொடி மதிள்சூழ் திருவரங்கத்தாய் !,
இவள்திறத்து என்செய்திட்டாயே ?. 7-2-3

பேரெயில்சூழ்கடல் தென்னிலங்கை செற்ற,
பிரான் வந்துவீற்றிருந்த *
பேரையிற்கேபுக்கு என்னெஞ்சம்நாடிப்,
பேர்த்துவரவெங்கும் காணமாட்டேன் **
ஆரையினி இங்குடையம்? தோழீ!,
என்னெஞ்சம் கூவவல்லாரும் இல்லை *
ஆரைஇனிக்கொண்டு என்சாதிக்கின்றது?,
என்னெஞ்சம் கண்டதுவேகண்டேனே. 7-3-7

மாறு நிரைத்து, இரைக்கும்சரங்கள் * இன
நூறுபிணம், மலைபோல் புரள ** கடல்
ஆறுமடுத்து, உதிரப்புனலா * அப்பன்
நீறுபட * இலங்கை செற்றநேரே. 7-4-7

கற்பார் இராமபிரானையல்லால், மற்றும் கற்பரோ? *
புற்பாமுதலாப், புல்லெறும்பாதி ஒன்றின்றியே **
நற்பாலயோத்தியில்வாழும், சராசரம் முற்றவும் *
நற்பாலுக்கு உய்த்தனன், நான்முகனார் பெற்றநாட்டுளே. 7-5-1

நாட்டில் பிறந்தவர், நாரணற்கு ஆளன்றியாவரோ?*
நாட்டில்பிறந்து, படாதனபட்டு மனிசர்க்கா **

நாட்டைநலியும் அரக்கரை, நாடித்தடிந்திட்டு *
நாட்டையளித்து உய்யச்செய்து, நடந்தமை கேட்டுமே. 7-5-2

ஆளியைக்காண்பரியாய், அரிகாண்நரியாய் * அரக்கர்
ஊளையிட்டு அன்று இலங்கைகடந்து, பிலம்புக்கொளிப்ப**
மீளியம்புள்ளைக்கடாய், விறல்மாலியைக்கொன்று * பின்னும்
ஆளுயர்குன்றங்கள்செய்து, அடர்த்தானையும்காண்டுங்கொலோ? 8

காண்டுங்கொலோ? நெஞ்சமே!, கடியவினையே முயலும் *
ஆண்திறல் மீளிமொய்ம்பின், அரக்கன் குலத்தைத்தடிந்து **
மீண்டும் அவன்தம்பிக்கே, விரிநீரிலங்கையருளி *
ஆண்டுதன்சோதிபுக்க, அமரர் அரிஏற்றினையே. 7-6-9

திருக்கடித்தானமும், என்னுடைச்சிந்தையும் *
ஒருக்கடுத்துஉள்ளே, உறையும்பிரான்கண்டீர் **
செருக்கடுத்து, அன்று திகைத்தஅரக்கரை *
உருக்கெட, வாளிபொழிந்தஒருவனே. 8-6-2

புகழும் இவள்நின்று இராப்பகல், பொருநீர்க்கடல்தீப்பட்டு * எங்கும்
திகழுமெரியோடு செல்வதொப்பச்,செழுங்கதிராழிமுதல் **
புகழும்பொருபடைஏந்திப் போர்புக்கு,அசுரரைப்பொன்றுவித்தான் *
திகழுமணி நெடுமாடநீடு, திருப்புலியூர்வளமே. 8-9-3

துணையும் சார்வுமாகுவார் போல், சுற்றத்தவர் பிறரும் *
அணையவந்த ஆக்கமுண்டேல் , அட்டைகள் போல் சுவைப்பர் **
கணையொன்றாலே ஏழ்மரமும் எய்த, எம்கார்முகிலை *
புணைஎன்றுய்யப் போகலல்லால், இல்லை கண்டீர்பொருளே. 9-1-2

காய்சினப்பறவையூர்ந்து, பொன்மலையின்
மீமிசைக் கார்முகில்போல்*மாசினமாலி மாலிமானென்று,
அங்கு அவர் படக்கனன்று முன்நின்ற**
காய்சினவேந்தே ! கதிர்முடியானே !,
கலிவயல் திருபுளிங்குடியாய் !*
காய்சின ஆழிசங்கு வாள்வில் தண்டேந்தி, எம்மிடர்கடிவானே!. 9-2-6

வீற்றிடங்கொண்டு வியன்கொள் மாஞாலத்து,
இதனுளும் இருந்திடாய் * அடியோம்
போற்றியோவாதே கண்ணிணை குளிரப்,
புதுமலர் ஆகத்தைப்பருக **

சேற்றிளவாளை செந்நெலூடுகளும்,
செழும்பணைத் திருப்புளிங்குடியாய் ! *
கூற்றமாய் அசுரர்குல முதலரிந்த,
கொடுவினைப்படைகள் வல்லானே!. 9-2-9

நன்கெண்ணி நான்வளர்த்த , சிறுகிளிப்பைதலே !*
இன்குரல் நீமிழற்றேல் , என்னாருயிர்க்காகுத்தன் **
நின் செய்யவாயொக்கும்வாயன் , கண்ணன் கைகாலினன் *
நின் பசுஞ்சாமநிறத்தன் , கூட்டுண்டு நீங்கினான். 9-5-6

துயர்கெடும் கடிதடைந்துவந்து, அடியவர்! தொழுமின் *
உயர்கொள்சோலை, ஒண்தடமணி ஒளி திருமோகூர் **
பெயர்களாயிரமுடைய, வல்லரக்கர் புக்கழுந்த *
தயரதன்பெற்ற, மரதகமணித் தடத்தினையே. 10-1-8

## *முதல் திருவந்தாதி*

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சி நகர் வந்துதித்த,
பொய்கைப்பிரான் கவிஞர் போரேறு ** வையத்து
அடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந்தாதி ,
படிவிளங்கச் செய்தான் பரிந்து

மலையால் குடைகவித்து, மாவாய்பிளந்து *
சிலையால், மராமரமேழ்செற்று **- கொலையானைப்
போர்க்கோடொசித்தனவும், பூங்குருந்தம் சாய்த்தனவும்*
கார்க்கோடு பற்றியான் கை. 27

ஆமே அமரர்க்கு அறிய? , அது நிற்க *
நாமே அறிகிற்போம் நல்நெஞ்சே! ** - பூமேய
மாதவத்தோன் தாள்பணிந்த , வாளரக்கன் நீள்முடியை *
பாதமத்தால் எண்ணினான் பண்பு. 45

அடைந்த அருவினையோடு, அல்லல் நோய் பாவம் *
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில் **- நுடங்கிடையை
முன்இலங்கைவைத்தான், முரணழிய * முன்னொருநாள்
தன்வில் அங்கைவைத்தான்சரண். 59

படையாரும் வாட்கண்ணார், பாரசிநாள் * பைம்பூந்
தொடையலோடு, ஏந்திய தூபம் **- இடையிடையில்
மீன்மாய, மாசூணும் வேங்கடமே * மேலொருநாள்
மான்மாயவெய்தான், வரை. 82

## *இரண்டாம் திருவந்தாதி*

என்பிறவி தீர இறைஞ்சினேன் இன்னமுதா,
அன்பே தகளியளித்தானை, - நன்புகழ் சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும், கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங்கழல்

திரிந்தது வெஞ்சமத்துத் , தேர்கடவி * அன்று
பிரிந்தது, சீதையை மான்பின்போய் ** - புரிந்ததுவும்
கண்பள்ளிகொள்ள , அழகியதே! * நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் தனக்கு. 15

சென்றது இலங்கைமேல், செவ்வே தன்சீற்றத்தால் *
கொன்றது இராவணனைக்கூறுங்கால் ** -நின்றதுவும்
வேயோங்கு தண்சாரல், வேங்கடமே * விண்ணவர் தம்
வாயோங்கு தொல்புகழான் வந்து. 25

மகனாகக் கொண்டெடுத்தாள், மாண்பாய கொங்கை *
அகனாரவுண்பனென்றுண்டு **- மகனைத்தாய்
தேறாதவண்ணம், திருத்தினாய்* தென்னிலங்கை
நீறாக எய்தழித்தாய்! நீ. 29

நீயன்றுலகளந்தாய், நீண்ட திருமாலே! *
நீயன்றுலகிடந்தாய் என்பரால் ** -நீயன்று
காரோதம் முன்கடைந்து, பின்னடைத்தாய் மாகடலை *
பேரோத மேனிப் பிரான்!. 30

தோளிரண்டெட்டேழும், மூன்றும் முடியனைத்தும்,
தாளிரண்டும் வீழச், சரந்துரந்தான் **- தாளிரண்டும்
ஆர்தொழுவார், பாதமவை தொழுவதன்றே? * என்
சீர்கெழுதோள் செய்யும் சிறப்பு? 43

## *மூன்றாம் திருவந்தாதி*

சீராரும் மாடத்திருக்கோவலூரதனுள் *
காரார் கருமுகிலைக்காணப்புக்கு * -ஓராத்
திருக்கண்டேன் என்றுஉரைத்த சீரான்கழலே *
உரைக்கண்டாய் நெஞ்சே! உகந்து

அவனே அருவரையால், ஆநிரைகள் காத்தான் *
அவனே, அணிமருதம் சாய்த்தான் ** - அவனே
கலங்காப்பெருநகரம், காட்டுவான்கண்டீர் *
இலங்கா புரமெரித்தானெய்து. 51

எய்தான் மராமரம், ஏழும் இராமனாய் *
எய்தானம்மான், மரிய ஏந்திழைக்காய் ** - எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன்வீழச், சென்று குறளுருவாய் *
முன்னிலங்கைக்கொண்டான் முயன்று. 52

ஆய்ந்த அருமறையோன், நான்முகத்தோன் நன்குறங்கில் *
வாய்ந்த குழவியாய் வாளரக்கன் ** - ஏய்ந்த
முடிப்போது, மூன்றேழ் என்றெண்ணினான் * ஆர்ந்த
அடிப்போது நங்கட்கு அரண். 77

## *நான்முகன் திருவந்தாதி*

நாராயணன் படைத்தான் நான்முகனை , நான்முகனுக்கு
ஏரார் சிவன்பிறந்தான் என்னும் சொல் - சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே! , மொய்பூ
மழிசைப்பரனடியே வாழ்த்து.

இலைதுணை மற்றென்னெஞ்சே!, ஈசனை வென்ற *
சிலைகொண்ட செங்கண்மால்சேரா ** - குலைகொண்ட
ஈரைந்தலையான், இலங்கையையீடழித்த *
கூரம்பனல்லால் குறை. 8

இதுவிலங்கையீடழியக், கட்டிய சேது *
இதுவிலங்கு வாலியை, வீழ்த்ததுவும் ** - இதுவிலங்கை

தானொடுங்க வில்நுடங்கத், தண்தார் இராவணனை *
ஊனொடுங்க எய்தான் உகப்பு. 28

உகப்புருவன் தானே, ஒளியுருவன் தானே *
மகப்புருவன் தானேமதிக்கில் ** - மிகப்புருவம்
ஒன்றுக்கொன்று, ஓசனையான்வீழ * ஒருகணையால்
அன்றிக்கொண்டெய்தானவன். 29

கொண்டு குடங்கால், மேல்வைத்தகுழவியாய் *
தண்டவரக்கன் தலைதாளால் - பண்டெண்ணி **
போம் குமரன்நிற்கும் ,பொழில் வேங்கடமலைக்கே *
போம் குமரருள்ளீர்!, புரிந்து. 44

கல்லாதவர், இலங்கை கட்டழித்த * காகுத்தன்
அல்லால், ஒருதெய்வம் யானிலேன் **- பொல்லாத
தேவரைத் தேவரல்லாரை, திருவில்லாத்
தேவரைத்தேறேன்மின் தேவு. 53

தற்பென்னைத், தானறியானேலும் * தடங்கடலைக்
கற்கொண்டு, தூர்த்தகடல்வண்ணன் ** - எற்கொண்ட
வெவ்வினையும் நீங்க, விலங்காமனம்வைத்தான் *
எவ்வினையும் மாயுமால்கண்டு. 77

தொழில் எனக்குத், தொல்லைமால் தன்னாமமேத்த *
பொழுது எனக்கு மற்றதுவேபோதும் ** - கழிசினத்த
வல்லாளன் வானரக்கோன், வாலிமதனழித்த *
வில்லாளன் நெஞ்சத்துளன். 85

## *திருவிருத்தம்*

கருவிருத்தக்குழிநீத்தபின் காமக்கடுங்குழிவீழ்ந்து *
ஒருவிருத்தம்புக்குழலுறுவீர்! உயிரின்பொருள்கட்கு *
ஒருவிருத்தம்புகுதாமல் குருகையர்கோனுரைத்த *
திருவிருத்தத்து ஓரடிகற்றிரீர் திருநாட்டகத்தே.

துழாநெடுஞ்சூழிருளென்று * தந்தண்தாரதுபெயரா
எழாநெடுஊழி , எழுந்தஇக்காலத்தும் ** ஈங்குஇவளோ !
வழாநெடுந் துன்பத்தளென்றிரங்கார் அம்மனோ! , இலங்கைக்
குழாநெடுமாடம் * இடித்தபிரானார் கொடுமைகளே ! 36

திங்களம்பிள்ளைபுலம்ப , தன்செங்கோலரசுபட்ட,
செங்களம்பற்றி நின்றெள்குபுன்மாலை ** தென்பாலிலங்கை
வெங்களம்செய்த நம்விண்ணோர்பிரானார், துழாய்துணையா ,
நங்களைமாமைகொள்வான் * வந்துதோன்றிநலிகின்றதே. 77

பேணலமில்லா அரக்கர் , முந்நீரபெரும்பதிவாய் *
நீள்நகர் நீளெரி வைத்தருளாயென்று ** நின்னைவிண்ணோர்
தாள் நிலம்தோய்ந்துதொழுவர் நின்மூர்த்திபல்கூற்றிலொன்று ,
காணலுமாங்கொல்?என்றே * வைகல் மாலையும் காலையுமே. 92

## *பெரிய திருவந்தாதி*

முந்துற்றநெஞ்சே! முயற்றிதரித்துரைத்து * வந்தித்து வாயார வாழ்த்தியே*
சந்தமுருகூரும்சோலைசூழ் மொய்பூம்பொருநல் * குருகூரன் மாறன் பேர்கூறு.

சூழ்ந்தடியார் வேண்டினக்கால் , தோன்றாது விட்டாலும் *
வாழ்ந்திடுவர் பின்னும் தம்வாய்திறவார் ** --சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள் போலரக்கன் , வன்தலைகள் தாம்இடிய *
தாள்வரை வில்லேந்தினார் தாம். 17

பின்துரக்கும் காற்றிழிந்த , சூற்கொண்டல் பேர்ந்தும்போய் *
வன்திரைக்கண், வந்தணைந்த வாய்மைத்தே ** --அன்று
திருச்செய்யநேமியான் ,தீயரக்கிமூக்கும் *
பருச்செவியும், ஈர்ந்தபரன் 63

பரனாம்அவனாதல் , பாவிப்பராகில் *
உரனால் ஒருமூன்றுபோதும் ** --மரமேழன்று
எய்தானைப் , புள்ளின்வாய்கீண்டானையே * அமரர்
கைதான் ,தொழாவே கலந்து ? 64

சூட்டாய நேமியான் , தொல்லரக்கனின்னுயிரை *
மாட்டேதுயரிழைத்த, மாயவனை ** --ஈட்ட
வெறிகொண்ட , தண்துழாய்வேதியனை * நெஞ்சே !
அறிகண்டாய், சொன்னேன்அது 66

துணைநாள் பெருங்கிளையும் , தொல்குலமும் * சுற்றத்
திணைநாளும் , இன்புடைத்தாமேலும் ** -- கணைநாணில்
ஓவாத்தொழிற்சார்ங்கன் , தொல்சீரை நல்நெஞ்சே ! *
ஓவாத ஊணாக உண். 78

## திருவெழுகூற்றிருக்கை

வாழி பரகாலன் வாழி கலிகன்றி, வாழி குறையலூர் வாழ்வேந்தன் * -
வாழியரோ மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள்
மங்கையர்கோன், தூயோன் சுடர்மான வேல்!

ஒருமுறை இருசுடர், மீதினில் இயங்கா * மும்மதிள்
இலங்கை, இருகால்வளைய * ஒரு சிலை
ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய், வாளியின்அட்டனை.

## சிறியதிருமடல்

முள்ளிச் செழுமலரோதாரான் முளைமதியம் *
கொள்ளிக்கு என்னுள்ளம் கொதியாமே* வள்ளல்
திருவாளன் சீர்க்கலியன் கார்க்கலியைவெட்டி*
மருவாளன் தந்தான் மடல்.

ஆரால்இலங்கை பொடிபொடியாவீழ்ந்தது?
தன்சீதைக்குநேராவனென்று ஓர்நிசாசரிதான்வந்தாளை *
கூரார்ந்தவாளால் கொடிமூக்கும்காதிரண்டும் *
ஈராவிடுத்து அவட்குமூத்தோனை. 17

வெந்நரகம்சேராவகையே சிலைகுனித்தான் *
செந்துவர்வாய் வாரார்வனமுலையாள் வைதேவிகாரணமா *
ஏரார்தடந்தோளிராவணனை. 18
ஈரைந்துசீரார்சிரமறுத்துச் செற்றுகந்தசெங்கண்மால் *

## பெரியதிருமடல்

பொன்னுலகில்வானவரும் பூமகளும்போற்றிசெய்யும் *
நல்நுதலீர்! நம்பிநறையூரர் * மன்னுலகில்
என்னிலைமைகண்டும் இரங்காரேயாமாகில் *
மன்னு மடலூர்வன்வந்து.

போர்வேந்தன் தன்னுடையதாதை பணியால்அரசொழிந்து *
பொன்னகரம்பின்னே புலம்பவலங்கொண்டு *
மன்னும்வளநாடு கைவிட்டு. 29

மாதிரங்கள்மின்னுருவில்விண்தேர் திரிந்துவெளிப்பட்டு *
கல்நிரைந்துதீந்து கழையுடைந்துகால்சுழன்று *
பின்னும்திரைவயிற்றுப் பேயேதிரிந்துலவா *
கொன்னவிலும் வெங்கானத்தூடு 30

கொடுங்கதிரோன் துன்னுவெயில்வறுத்த
வெம்பரல்மேல்பஞ்சடியால்*மன்னன்இராமன்
வண்ணம்போல் அன்னகடலை மலையிட்டணைகட்டி *
மன்னன்இராவணனை மாமண்டுவெஞ்சமத்து *
பொன்முடிகள்பத்தும் புரளச்சரம்துரந்து *
தென்னுலகம் ஏற்றுவித்த சேவகனை
தென்னிலங்கையாட்டி அரக்கர்குலப்பாவை *
மன்னன் இராவணன் தன் நல்தங்கை 76

வாளெயிற்றுத்துன்னுசுடுசினத்துச் சூர்ப்பணகாசோர்வெய்தி *
பொன்னிறங்கொண்டு புலர்ந்தெழுந்தகாமத்தால் *
தன்னைநயந்தாளைத் தான்முனிந்துமூக்கரிந்து *
மன்னியதிண்ணெனவும் வாய்த்தமலைபோலும் *
தன்னிகரொன்றில்லாத தாடகையை 77
மாமுனிக்காத்தென்னுலகம் ஏற்றுவித்த திண்திறலும்

***********

ஸ்ரீ :

# ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை
# தொகுத்தருளிய திவ்யப் பிரபந்த பாசுர ராமாயணம்

## பால காண்டம்

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ
நலமந்தமில்லதோர் நாட்டில்
அந்தமில் பேரின்பத்தடிய ரோடு
ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும்
அயர்வறும் அமரர்கள் அதிபதியான
அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பன்
அலைநீர்க் கடலுள் அழுந்தும் நாவாய்போல்
ஆவாரார் துணையென்று துளங்கும்
நல்ல அமரர் துயர் தீர
வல்லரக்கர் இலங்கை பாழ்படுக்க எண்ணி
மண்ணுலகத்தோ ருய்ய
அயோத்தி என்னும் அணி நகரத்து
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்க்
கௌசலைதன் குல மதலையாய்த்
தயரதன் தன் மகனாய்த் தோன்றிக்
குணம் திகழ் கொண்டலாய்
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்வி காக்க நடந்து
வந்தெதிர்ந்த தாடகை தன் உரத்தைக் கீண்டு
வல்லரக்கர் உயிருண்டு கல்லைப் பெண்ணாக்கிக்
காரார் திண்சிலை யிறுத்து,
மைதிலியை மணம் புணர்ந்து
இருபத் தொருகால் அரசு களைகட்ட
மழுவாளி வெவ்வரி நற்சிலை வாங்கி வென்றிகொண்டு
அவன் தவத்தை முற்றுஞ் செற்று
அம்பொனெடு மணிமாட அயோத்தி எய்தி

## அயோத்தியா காண்டம்

அரியணை மேல் மன்னன் ஆவான் நிற்கக்
கொங்கையவள் கூனி சொற்கொண்ட
கொடிய கைகேயி வரம் வேண்ட
அக்கடிய சொற் கேட்டு
மலக்கியமா மனத்தினனாய் மன்னவனுமறாதொழியக்

**குலக்குமரா! காடுறையப் போ என்று விடை கொடுப்ப**
**இந்நிலத்தை வேண்டாது**
**ஈன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் ஆங்கொழிந்து**
**மைவாய களிறொழிந்து மாவொழிந்து தேரொழிந்து**
**கலனணியாதே காமரெழில் விழலுடுத்து**
**அங்கங்கள் அழகு மாறி**
**மானமரு மென்னோக்கி வைதேகி யின்துணையா**
**இளங்கோவும் வாளும் வில்லும் கொண்டு பின்செல்லக்**
**கலையும் கரியும் பரிமாவும்**
**திரியும் கானம் கடந்து போய்ப்**
**பத்தியுடைக் குகன் கடத்தக் கங்கை தன்னைக் கடந்து**
**வனம் போய்ப் புக்குக் காயோடு நீடு கனியுண்டு**
**வியன் கானமரத்தின் நீழல்**
**கல்லணைமேல் கண்துயின்று**
**சித்திரகூடத் திருப்ப, தயரதன்தான்**
**நின் மகன்மேல் பழிவிளைத்திட்டு**
**என்னையும் நீள்வானில் போக்க**
**என் பெற்றாய் கைகேசீ?**
**நானும் வானகமே மிக விரும்பிப் போகின்றேன்**
**என்று வானேறத்**
**தேனமரும் பொழில்சாரல் சித்திரகூடத்து**
**ஆனைபுரவி தேரோடு காலாள்**
**அணிகொண்ட சேனை சுமந்திரன்**
**வசிட்டருடன் பரத நம்பி பணியத்**
**தம்பிக்கு மரவடியை வான் பணயம் வைத்துக் குவலயத்**
**துங்கக் கரியும் பரியும் இராச்சியமும்**
**எங்கும் பரதற்கு அருளி விடை கொடுத்துத்**
**திருவுடைய திசைக்கருமம் திருத்தப்போய்த்**
**தண்டகாரணியம் புகுந்து**

**<u>ஆரண்ய காண்டம்</u>**
**மறை முனிவர்க்கு**
**அஞ்சேல்மின்! என்று விடை கொடுத்து**
**வெங்கண் விறல் விராதனுக விற்குனித்து**
**வண்டமிழ் மாமுனி கொடுத்த வரிவில் வாங்கிப்**
**புலர்ந்தெழுந்த காமத்தால் சீதைக்கு நேராவன்**
**என்னப் பொன்னிறங் கொண்ட**

**சுடு சினத்த சூர்ப்பணகாவைக்**
**கொடி மூக்கும் காதி ரண்டும்**
**கூரார்ந்த வாளால் ஈரா விடுத்துக்**
**கரனோடு தூடணன்தன் னுயிரை வாங்க**
**அவள் கதறித் தலையில் அங்கைவைத்து**
**மலையிலங்கை யோடிப்புகக்**
**கொடுமையில் கடுவிசை அரக்கன்**
**அலை மலி வேற் கண்ணாளை அகல்விப்பான்**
**ஓருருவாய் மானை யமைத்துச் சிற்றெயிற்று**
**முற்றல் மூங்கில் மூன்று தண்டத்தனாய் வஞ்சித்து**
**இலைக்குரம்பில் தனி யிருப்பில்**
**கனி வாய்த் திருவினைப் பிரித்து**
**நீள் கடல்சூழ் இலங்கையில்**
**அரக்கர் குடிக்கு நஞ்சாகக் கொடுபோய்**
**வம்பலாங்கடிகாவில் சிறையாய் வைக்க**
**அயோத்தியர்கோன் மாயமான் மாயச் செற்று**
**அலைமலிவேற் கண்ணாளை அகன்று தளர்வெய்திச்**
**சடாயுவை வைகுந்தத்தேற்றிக்**
**கங்குலும் பகலும் கண் துயிலின்றிக்**
**கானகம் படி யுலாவி யுலாவிக்**
**கணை யொன்றினால் கவந்தனை மடித்துச்**
**சவரிதந்த கனியுவந்து**

**<u>கிஷ்கிந்தா காண்டம்</u>**

**வன மருவு கவியரசன் தன்னோடு காதல்கொண்டு**
**மராமர மேழெய்து**
**உருத்தெழு வாலி மார்பில்**
**ஒருகணை உருவ ஓட்டிக்**
**கருத்துடைத் தம்பிக்கு**
**இன்பக் கதிர்முடி அரசளித்து**
**வானரக் கோனுடனிருந்து வைதேகி தனைத்தேட**
**விடுத்த திசைக்கருமம் திருத்து**
**திறல் விளங்கும் மாருதியும்**
**மாயோன் தூதுரைத்தல் செப்பல்**

<u>சுந்தர காண்டம்</u>

**சீராரும் திறல் அனுமன் மாக்கடலைக் கடந்தேறி**
**மும்மதிள்நீள் இலங்கை புக்குக் கடிகாவில்**
**வாராருமுலை மடவாள் வைதேகி தனைக்கண்டு**
**நின்னடியேன் விண்ணப்பம் கேட்டருளாய்!**
**அயோத்தி தன்னில் ஓர்**
**இடவகையில் எல்லியம் போதினிதிருத்தல்**
**மல்லிகை மாமாலை கொண்டங்கார்த்ததும்**
**கலக்கியமா மனத்தளாய்க் கைகேயி வரம்வேண்ட**
**மலக்கியமா மனத்தினனாய் மன்னவனும் மறாதொழியக்**
**குலக்குமரா! காடுறையப்போ என்று விடை கொடுப்ப**
**இலக்குமணன் தன்னோடங்கேகியதும்,**
**கங்கை தன்னில்**
**கூரணிந்த வேல்வலவன் குகனோடு**
**சீரணிந்த தோழமை கொண்டதுவும்**
**சித்திரகூடத் திருப்பப் பரத நம்பி பணிந்ததுவும்,**
**சிறுகாக்கை முலைதீண்ட மூவுலகும் திரிந்தோடி**
**வித்தகனே! ராமாஓ! நின்னபயம் என்ன**
**அத்திறமே அதன் கண்ணை அறுத்ததுவும்,**
**பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட**
**நின்னன்பின் வழிநின்று சிலைபிடித் தெம்பிரானேகப்**
**பின்னேயங்கு இலக்குமணன் பிரிந்ததுவும்**
**அயோத்தியர் கோனுரைத்த அடையாளம்**
**ஈதவன்கை மோதிரமே என்று**
**அடையாளம் தெரிந்துரைக்க**
**மலர்க்குழலாள் சீதையும்,**
**வில்லிறுத்தான் மோதிரம் கண்டு ;**
**அநுமான் அடையாளம் ஒக்கும் என்று**
**உச்சிமேல் வைத்துகக்கத்**
**திறல் விளங்கும் மாருதியும்**
**இலங்கையர்கோன் மாக்கடிகாவை யிறுத்து,**
**காதல் மக்களும் சுற்றமும் கொன்று,**
**கடி இலங்கை மலங்க எரித்து**
**அரக்கர்கோன் சினமழித்து மீண்டு, அன்பினால்**
**அயோத்தியர்கோன் தளிர்புரையும் அடியிணைபணிய**

<u>யுத்த காண்டம்</u>

**கான எண்கும் குரங்கும் முசுவும்**
**படையாக் கொடியோனிலங்கை புகலுற்று**
**அலையார் கடற்கரை வீற்றிருந்து**
**செல்வ விபீடணற்கு நல்லானாய்**
**விரிநீ ரிலங்கை யருளிச்**
**சரண்புக்க குரைகடலை அடலம்பால் மறுகஎய்து**
**கொல்லை விலங்கு பணிசெய்ய**
**மலையாலணைகட்டி மறுகரையேறி**
**இலங்கை பொடி பொடியாகச்**
**சிலைமலி செஞ்சரங்கள் செல வுய்த்துக்**
**கும்பனோடு நிகும்பனும்பட**
**இந்திரசித் தழியக் கும்பகர்ணன் பட**
**அரக்கராவி மாஎ, அரக்கர்**
**கூத்தர் போலக் குழமணி தூரமாட**
**இலங்கை மன்னன் முடியொருபதும்**
**தோளிருபதும் போயுதிரச்**
**சிலைவளைத்துச் சரமழைபொழிந்து**
**கரந்துணிந்து வெற்றிகொண்ட செருக்களத்துக்**
**கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத்தானும்**
**எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்**
**மற்றுமுள்ள வானவர் மலர்மழை பொழிந்து**
**மணிமுடி பணிதர அடியிணை வணங்கக்**
**கோலத்திருமா மகளோடு செல்வவீடணன் வானரக் கோனுடன்**
**இலகுமணி நெடுந்தேரேறின**
**சீரணிந்த குகனோடு கூடி**
**அங்கணெடு மதில்புடைசூழ் அயோத்தி எய்தி**
**நன்னீராடிப் பொங்கிளடவாடை யரையில் சாத்தித்**
**திருச்செய்ய முடியும் ஆரமும் குழையும்**
**முதலா மேதகு பல்கலனணிந்து**
**சூட்டு நன் மாலைகளணிந்து பரதனும் தம்பி சத்துருக்கனனும்**
**இலக்குமணனும் இரவு நண்பகலும் ஆட்செய்ய**
**வடிவிணை இல்லாச் சங்கு தங்கு முன்கை நங்கை**
**மலர்க்குழலாள் சீதையும் தானும்**
**கோப்புடைய சீரிய சிங்காதனத்திருந்து ஏழுலகும்**
**தனிக்கோல் செல்ல வாழ்வித்தருளினார்.**

---